விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= 

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 055 வள்ளுவர் ஆண்டு 2056 தை 30 புதன்கிழமை (12.02.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# தையிட்டி விகாரை குறித்து எந்த முடிவும் எடுக்கவில்லை

## புத்த சாசன அமைச்சர் சுனில் செனவி



(கொழும்பு)

தையிட்டியில் அமைந்துள்ள பௌத்த விகாரை தொடர்பாக அரசாங்கம் எந்தவிதமான தீர்மானமும் எடுக்கவில்லை என புத்த சாசன அமைச்சர் சுனில் செனவி தெரிவித்தார்.

ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தனியாருக்குச் சொந்தமான காணியில் அமைந்துள்ளதாகக் கூறப்படும் விகாரையை அகற்ற வலியுறுத்தி செய்வாய்க் 15

## மின்வெட்டு இன்று இல்லை

(கொழும்பு)


நாட்டில் இன்று மின்வெட்டு அமுல்படுத்தப்படாது என இலங்கை மின்சார சபைதெரிவித்துள்ளது. 15

### வவுனியாவில்
## ஆணொருவரின் சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியா பசார் வீதியில் உள்ள கடைத் தொகுதியில் நேற்றுக் காலை ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். 15

## தையிட்டியில் போராட்டம் ஆரம்பம்



15

### வடக்கு, கிழக்கில்
## கிராமிய வீதிகளை புனரமைக்க அனுமதி

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணப்படும் கிராமிய வீதிகளைப் புனரமைப்பு செய்வதற்கும் மற்றும் மேம்படுவதற்கும் அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பல வீதிகள் புனரமைக்கப்பட வேண்டிய நிலைமையில் காணப்படுவ 15

## 7,456 பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புக்கு அனுமதி

(கொழும்பு)

அரச சேவையில் ஆட்சேர்ப்புச் செயன்முறையை மீளாய்வு செய்தல் மற்றும் பணிக்குழாமினரை முகாமைத்துவம் செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் விதந்துரைகளுக்கமைய 7 ஆயிரத்து 456 பதவி வெற்றிடங்களுக்கான நியமனங்களை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் நிலவும் 3 ஆயிரம் பதவி வெற்றிடங்களையும், பாதுகாப்பு அமைச்சில் நிலவும் 9 பதவி வெற்றிடங்களையும், விஞ்ஞானம் 15

## உலக அரசுகளுக்கிடையிலான உச்சி மாநாடு நேற்று ஆரம்பம்

### ஜனாதிபதி அநுர இன்று உரையாற்றவுள்ளார்

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டு உலக அரசுகளுக்கு இடையிலான உச்சி மாநாடு நேற்று டுபாயில் ஆரம்பமானது.

குறித்த உச்சி மாநாட்டில் இன்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உரையாற்றவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் உலக அரசுகளுக்கு இடையிலான உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளும் பல நாடுகளின் அரச தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுடனும் ஜனாதிபதி அநுர குமார 15

## கோம்பயன்மணல் மருத்துவ எரியூட்டியால் தமக்கு பாதிப்பு

### அப்பகுதி மக்கள் எதிர்ப்புப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் அமைக்கப்பட்டுள்ள மருத்துவ எரியூட்டியால் தமக்குப் பாதிப்பு ஏற்படுவதாகத் தெரிவித்து அப்பகுதி மக்கள் நேற்றைய தினம் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மருத்துவ எரியூட்டியில் மருத்துவக் கழிவுகள் எரிக்கப்படுவதால் அதில் இருந்து கிளம்பும் புகை காரணமாக சுவாசப் பிரச்சினை, துர்நாற்றம் என்பன ஏற்படுவதால் அயலில் வசிக் 15

### இரு வேறு திருட்டு
## வவுனியாவில் ஒருவர் கைது

(வவுனியா)

வவுனியா, பூவரசங்குளம் பகுதியில் இடம்பெற்ற இரு வேறு திருட்டுச் சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகக் குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் நேற்று தெரி 15

### தையிட்டி விகாரை விவகாரம்
## கஜேந்திரகுமார் எம்.பிக்கு நீதிமன்றம் அழைப்பாணை

(யாழ்ப்பாணம்)

தையிட்டி விகாரை விவகாரம் தொடர்பில் மல்லாகம் நீதிமன்றம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு நேற்று அழைப்பாணை விடுத்துள்ளது.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கருத்துத் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழிநீர் சொரிகிறோம்



எமது கல்லூரி ஆசிரியை
**திருமதி சதீசினி வருண்**
அவர்களின் கனிஷ்ட புதல்வன்

# வ.தஸ்விக்

அவர்கள் இறைபதம் அடைந்தமையால் மீளாத் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா/ இணுவில் மத்திய கல்லூரி**

(3399)

## நாகை - காங்கேயன் கப்பல் சேவை இரத்து

காங்கேசன்துறைக்கும் நாகப்பட்டினத்திற்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையானது இன்று இடம்பெறாது என கப்பல் நிறுவனத்தின் தலைவர் சுந்தரராஜ் பொன்னுசாமி தெரிவித்துள்ளார்.

காலநிலை சீரின்மை காரணமாக நிறுத்தப்பட்டிருந்த பயணிகள் கப்பல் போக்குவரத்தானது இன்று ஆரம்பிக்கப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் சிறிய தொழில்நுட்ப கோளாறு காரணமாக கப்பல் சேவையானது இடம்பெறாது எனவும், கப்பல் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. (ம-7)



தைப்பூச நன்நாளான நேற்று தமிழ்க் கடவுளான கந்தப் பெருமான் இணுவையம்பதிதனில் இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞானா சக்தி சமேத சண்முகராய் உலகப் பெரும் மஞ்சம் தனில் ஆரோகணித்து அவனிதனில் பவனி வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

## மரண அறிவித்தல்

### மதியாபரணம் மங்களநாயகி



மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி மதியாபரணம் மங்களநாயகி அவர்கள் நேற்று 11.02.2025 செவ்வாய்க்கிழமை மண்டைதீவில் காலமானார்.

அன்னார் அல்லைப்பிட்டியைச் சேர்ந்த பொன்னுத்துரை மதியாபரணம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான செல்லையா (வெள்ளையர்) - கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மகளும் சுந்தரநாயகி, நாகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 11.02.2025 செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் மண்டைதீவு தலைக்கீரி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மண்டைதீவு 6 ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.

தகவல் : சகோதரர்கள்
ம.சுந்தரநாயகி,
செ.நாகரத்தினம் (074 138 7058)

## பணியாளர் தேவை

வயோதிபப் பெண் பராமரிப்பிற்கும் வீட்டுப்பணிக்கும் தங்கி இருந்து வேலை செய்ய தகுதியான பெண் பணியாளர் தேவை
உணவு, தங்குமிடம் உண்டு.
வேலைத்திறனுக்கு ஏற்ப (40,000–45,000) சம்பளம் தரப்படும்
தொடர்ந்து வேலை செய்யக் கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும்
தரகர் தொடர்பு தேவையில்லை

தொடர்பு
0754847171 வடமராட்சி கரவெட்டி

(C-2252)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## மரண அறிவித்தல்



தோற்றம் 12 . 11 . 1944
மறைவு 09 . 02 . 2025

### இராசேந்திரம் சிவபூரணம்

கட்டுவன் தெற்கு தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் சிவபூரணம் அவர்கள் 09.02.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - இராசம்மா தம்பதியினரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற இராசேந்திரம் அவர்களின் அன்பு மனைவியும் றாதிகா(கனடா), ரேனுகா(அமெரிக்கா), வேலழகன் (கனடா), ரூபிகா(ரூபா), காலஞ்சென்ற ஜெயக்குமரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் யோகதாஸ், சிவகுமார், பிரபாகரன், நிசாந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவஞானஇரத்தினம், காலஞ்சென்ற சிவஞான்வதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் இராஜேஸ்வரி, காலஞ்சென்ற சிவசுப்ரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் கார்த்திகா, யோதிகா(கனடா), சாரங்கா(அமெரிக்கா), அபிராமி, அபிலாஸ், ஜெம்மிகா, ஜெஸ்விகா(கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 12.02.2025 புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்
077 923 5571

(3395)

## மரண அறிவித்தல்



பிறப்பு 1939 - 05 - 20
இறப்பு 2025 - 02 - 10

### சரவணமுத்து தெய்வானைப்பிள்ளை

இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரவணமுத்து தெய்வானைப்பிள்ளை அவர்கள் கடந்த (10.02.2025) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து அவர்களின் அன்பு மனைவியும் தனலட்சுமி (கனடா), லட்சுமிகாந்தன் (ஜேர்மனி), நாகலட்சுமி (யா/இடைக்காடு ம.வி), தெய்வலட்சுமி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இராஜேஸ்வரன் (கனடா), ஹேமாவதி (ஜேர்மனி), அமரர் தங்கவேலு, விக்கினேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அமரர் வேலாயுதபிள்ளை, கணபதிப்பிள்ளை, சுப்பிரமணியம் (கனடா) ஆகியோரின் சகோதரியும் பரணிகா - சஜய்காந் (கனடா), கீர்த்தன் (கனடா), கேனுஜன், சோபிஜன், கிருஜன் (ஜேர்மனி), துவாரகி, பவீனா, யதுஷா, தரன் (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியும் சித்தார்த், ஸ்ரீகித் (கனடா) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (12.02.2025) புதன்கிழமை பி.ப 02.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாமித்திடல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


[illegible],
இடைக்காடு,
அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்
077 711 2929

(3398)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் தென்திசை நுழைவாயில் திறப்பு



(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் - நல்லூர் கந்த சுவாமி ஆலயத்தின் "நல்லூரான் தெற்கு வாசல் வளைவு" நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இவ் அலங்கார வளைவு சம்பிரதாய, பண்பாட்டு சின்னங்களைத் தாங்கியவாறு தவில், நாதஸ்வரம் இசைக்க, இறையாசியுடன் அலங்கார வளைவுத் திறப்பு விழா இடம் பெற்றது. நல்லூர் கைலாசப் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து நெல் மணிகள் நிரப்பப் பட்ட பெட்டகத்தை பாரம்பரிய முறைப்படி மாட்டுவண்டியில் ஏற்றி நல்லூரான் தெற்கு வாசல் வளைவினூடாக நல்லூர் ஆலயத்திற்கு கொண்டு செல்லப்பட்டு சிவாச்சாரியாரிடம் கையளிக்கப்பட்டது.

சைவசமயப் பெரியவர் கள், நல்லூர் கந்தசுவாமி ஆலய பரிபாலகர்கள், பொது மக்கள் எனப் பலரும் திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டனர். (நி-8-33)




# வீதி விபத்துக்களால் இதுவரை 203 பேர் பலி

(கொழும்பு)

இந்த வருடத்தில் இது வரையான காலத்தில் வீதி விபத்துகளில் நூற்றுக் கணக்கானோர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸ் போக்கு வரத்துப் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மனோஜ் ரணகல தெரிவித்தார்.

இதற்கமைய, இந்த வருடத்தில் இதுவரையான காலத்தில் மட்டும் கவனக் குறைவாக வாகனம் செலுத்தியதால் ஏற்பட்ட விபத்தில் 203 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

அதன்படி ஜனவரி 1 ஆம் திகதி முதல் பெப்ரவரி 7 ஆம் திகதிவரை நடந்த வீதி விபத்துகளில் இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (நி-8)

# போலி விளம்பரங்கள் தொடர்பில் மத்தியவங்கி மீண்டும் எச்சரிக்கை!

(கொழும்பு)


போலியான வேலை வாய்ப்பு விளம்பரங்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு இலங்கை மத்திய வங்கி பொது மக்களுக்கு மீண்டும் எச்சரிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியில் எந்தவொரு வேலை வாய்ப்புகளையும் மூன்றாம் தரப்புத் தளங்களில் இடுகையிடமாட்டோம்.

மேலும், அனைத்து உத்தியோகபூர்வ வேலை வாய்ப்புகள் பற்றிய தகவல்களையும் இலங்கை மத்திய வங்கியின் வலைத்தளம் மற்றும் உத்தியோகபூர்வ சமூக ஊடக வலைத்தளங்களில் இருந்து மட்டுமே பெறமுடியும்.

மத்திய வங்கி வேலை வாய்ப்புகளுக்கு ஆட்சேர்ப்பு செய்ய வேறு எந்த நபரோ அல்லது வலைத்தளமோ அனுமதிக்கப்படவில்லை எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மத்திய வங்கியில் வேலை வாய்ப்புகள் உள்ளதாக சமூக வலைத்தளங்களில் போலியான விளம்பரங்கள் அதிகம் பகிரப்பட்ட நிலையில் இந்த எச்சரிக்கை மீண்டும் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

IDMNC INTERNATIONAL



16TH FEB

09 AM

Jaffna Thiruvalluvar Cultural Centre

WORLD AWAITS

GLOBAL PATHWAYS

- Exploring career options across various fields
- Understanding the importance of higher education and skill development
- Study Abroad and Employment

For After A/l's Students, School Leavers, Undergraduate, Graduate

(சி-2246)

With VK Karikalan

More Info : 076 097 0954

IDM Nations Campus International


No.839, Hospital Road, Jaffna

021 222 9901

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பற்றீசியன்ஸ் அணி 5 இலக்குகளால் வெற்றி





கொக்குவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் வருடாந்தம் நடத்தும் 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் 2 ஆவது லீக் போட்டியில் பற்றீசியன்ஸ் அணி 5 இலக்குகளால் வெற்றி பெற்றுள்ளது. கடந்த திங்கட் கிழமை நடைபெற்ற இப்போட்டியில் பற்றீசியன்ஸ், கிருஸ் கொப்பர்ஸ் அணிகள் மோதியிருந்தன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிருஸ் கொப்பர்ஸ் அணி 27.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 163 ஓட்டங்களை பெற்றது. ஜனன்தன்-34, அபிசாந்-31, அஜித்-28 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

பற்றீசியன்ஸ் அணியின் பந்து வீச்சில் பியற்றிக் 22 ஓட்டங்களைக் கொடுத்து 3, டனிசஸ் 15 ஓட்டங்களைக் கொடுத்து 2, ஜெகன் 34 ஓட்டங்களைக் கொடுத்து 1 இலக்கினையும் கைப்பற்றினர்.

164 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய பற்றீசியன்ஸ் அணி 5 இலக்குகளை இழந்து 164 ஓட்டங்களை பெற்றுள்ளது.


சேர்ச்சில்-49, சாம்டிருந்-40, சாம்டிமுத் ஆட்டமிழக்காது 38 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் கிருஸ் கொப்பர்ஸ் அணியை சார்ந்த பதுாஸன் 23 ஓட்டங்களை கொடுத்து 2, துலக்சிகன் 20 ஓட்டங்களை கொடுத்து 1. ஜனன்தன் 25 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கினையும் கைப்பற்றினர். இப்போட்டியில் சிறந்த வீரராக பற்றீசியன்ஸ் அணியைச் சார்ந்த சேர்ச்சில் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 900 | 800 | 800 | 600-800 | 800 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 1400 | 1300 | 1000 | 900-1000 | 1200 |
| தக்காளி | 200 | 200 | 250 | 200 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 260 | 250 | 250-270 | 200 |
| கோவா | 350 | 300 | 250 | 300 | 350 |
| கரட் | 450 | 850 | 800 | 800 | 900 |
| பூசணி | 120 | 120 | 150 | 80-100 | 160 |
| புடோல் | 200 | 280 | 200 | 200-250 | 300 |
| வாழைக்காய் | 250 | 180 | 150 | 100-150 | 250 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 300 | 150-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 200 | 200 | 150 | 200 |
| பாகற்காய் | 500 | 500 | 600 | 500-600 | 600 |
| வெண்டக்காய் | 300 | 400 | 300 | 300 | 600 |
| கருணைக் கிழங்கு | 120 | 160 | 180 | 150 | 200 |
| பயற்றங்காய் | 800 | 500 | 800 | 500-700 | 800 |
| லீக்ஸ் | 350 | 380 | 300 | 300 | 400 |
| பீற்றூட் | 300 | 300 | 250 | 400 | 400 |
| கறிமிளகாய் | 1000 | 1000 | 1000 | 600-800 | 1000 |
| முருங்கைக்காய் | -- | 3000 | 1000 | 1500 | 2400 |
| போஞ்சி | 400 | 400 | 300 | 400-500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 750 | 600 | 700 | 500 | 700 |
| கீரை - 1 பிடி | 120 | 140 | 150 | 50-70 | 200 |
| தேசிக்காய் | 300 | 250 | 150 | 150-200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 220 | 200 | 250 | 150-250 | 200-260 |
| இராசவள்ளி | 600 | 500 | 600 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 180 | 180 | 200 | 120-170 | 250 |
| முள்ளங்கி | 100 | 120 | 200 | 120 | 160 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 50 | 80 |
| ஈரப்பலா | 150 | 120 | 80 | 100 | 150 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3289

**மேதினி**




**சிவானு**




**லக்சிகா**




**மிதுளன்**




**யதுஷ்**




**வந்தேஷ்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலா பயணிகள் பயணித்த படகு செயலிழப்பு

## விரைந்து மீட்ட கடற்படை

(நெடுந்தீவு)

நெடுந்தீவு குறிகட்டுவான் இடையில் செயலிழந்த படகினை கடற்படையினர் விரைந்து நடவடிக்கை எடுத்து பாதுகாப்பாக கரைக்கு அழைத்துக் கொண்டு வந்தனர்.

நெடுந்தீவை பார்வையிட வந்த வெளிநாட்டு சுற்றுலாத் தம்பதியரை ஏற்றிச் சென்ற நயினாதீவு படகு, கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நெடுந்தீவில் இருந்து குறிகட்டுவான் துறைமுகத்துக்கு செல்லும் வழியில் எரிபொருள் பற்றாக்குறையால் கடலில் செயலிழந்தது.

இதனையடுத்து நெடுந்தீவில் அமைந்துள்ள இலங்கை கடற்படையின் வசப நிறுவனத்திற்குச் சொந்தமான P239 கரையோர ரோந்து கப்பல் மூலம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக பரிசோதனையில் படகு, எரிபொருள் தட்டுப்பாட்டால் செயலிழந்து மிதந்து கொண்டிருந்தது உறுதிப்படுத்தப்பட்டது.

அதன்பின்னர் கடற்படையினர் படகிற்குத் தேவையான உதவிகளை வழங்கியதுடன் சுற்றுலாத் பயணிகளுடன் படகை பாதுகாப்பாக குறிகட்டுவான் துறைமுகத்துக்கு அழைத்து சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# மரண அறிவித்தல்

## இராசரத்தினம் புவனேந்திரராஜா (புவனேந்தி)

தோற்றம் 23 . 09 . 1966



மறைவு 10 . 02 . 2025

அல்வாய் வடமேற்கை பிறப்பிடமாகவும் நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் புவனேந்திரராஜா (புவனேந்தி - செல்லப்பிள்ளையார் ஸ்தாபன நிலைய உரிமையாளர்) கடந்த 10.02.2025 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம்-மனோன்மணி தம்பதிகளின் அன்புப் புதல்வனும் குணசீலாவின் பாசமிகு கணவரும் மயூரி(சுவிஸ்), கஜன் (இலண்டன்), நிவேதினி (இலண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ராஜ்மோகன், கிரி ஆகியோரின் அன்பு மாமனாரும் ரியாஷ்மி, றியார்த், றிகாஷ்மி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 13.02.2025 வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பொன்கந்தையா வீதி, நெல்லியடி. (3393) தகவல்: குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 27 . 04 . 1944



மறைவு 10 . 02 . 2025

எமது நண்பன் கிருபரங்கனின்
அன்புத் தந்தையார்

## அமரர். ஆறுமுகம் பஞ்சாட்சரம்

அவர்கள் காலமான செய்தியறிந்து
ஆழ்ந்த துயரடைகின்றோம்.
அவரின் பிரிவால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு
ஏமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ்.இந்துக்கல்லூரி,
2002 உயர்தரப்பிரிவு நண்பர்கள். (3400)

# இராசிபலன்

12.02.2025
தை 30, புதன்கிழமை
பூரணை முன்னிரவு 8.12 மணிவரை
ஆயிலியம் முன்னிரவு 8.24 மணிவரை

சுபநேரம் -5.04- 6.34 மணிவரை
இராகுகாலம் 12.34- 2.04 மணிவரை
பூரணை விரதம்

சந்திராஷ்டமம் - பூராடம், உத்தராடம்

வளவன்




அழகுசாதனப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.




கௌரவமிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வழிபாட்டால் இன்பம் காண வேண் டிய நாள், பயணங்களின் மூலம் சுபசெய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.




செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.




பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.




வங்கிச் சேமிப்பை அதிகரிக்க முற்படு வீர்கள், தொழில் போட்டிகள் மாறும், விடாமுயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும், போசன சுகமுண்டு, உறவினர் வழியில் ஒத்துழைப்புக் கிடைக்கும்.




விருந்தினர் வருகையால் சுபவிரயங்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.




விருந்தினர் வருகையுண்டு, பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.




குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், கூட்டுத் தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கலாம், கடன்சுமை குறைய வழிவகை செய்வீர்கள்.




கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி சமாளிப்பீர்கள், பயணங்களால் ஆதாயம் கிடைக்கும், எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.




குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், ஒளிமயமான எதிர்காலத்திற்கு உறுதுணை புரியும் நாள்.




எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள்.




நீண்ட நாட்களாக திட்டமிட்ட காரியங்கள் இன்று கைகூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள்.

தன்னம்பிக்கை உள்ளவனுக்கு எல்லா வாயில்களும் திறந்து வரவேற்பு அளிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெப்ரவரி 04: உலக புற்றுநோய் தினம்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். வாழ்நாள் வரை ஒருவருக்கு இந்தச் செல்வம் கிடைத்துவிட்டால் அதைப்போல எந்த செல்வமும் ஈடாகாது. நோயற்ற வாழ்க்கை கிடைத்துவிட்டால் அத்துணை தவம் கிடைக்க கொடுத்துவைக்க வேண்டும். பணமிருந்தும் நோய்வாய்ப்பட்டால் அதனது பயனை அடைவது இயலாத காரியமாகும். நோய்கண்டவர்களின் தனிமனித சுகாதாரமும் குடும்ப சுகாதாரமும் கேள்விக்குள்ளாகிவிடும். அதிலும் இவ்வாறான தொற்றா நோய்கள் பலரது வாழ்க்கையை கேள்விக்குறியாக்கி இறுதியில் அவர்களை நாம் இழப்பதாகிவிடும். புற்றுநோய், நீரிழிவு, ஆஸ்துமா போன்றன ஒருவரிலிருந்து இன்னொருவருக்கு தொற்றாத நோய்களாகும். அதிலும் புற்றுநோய் பீடித்தவர்கள் கவனிக்காதுவிட்டு பல்கிப்பெருகியபின் பல்வேறுபட்ட நோய்சிகிச்சை முறைகளுக்குள் உடலை உருக்கி இறுதியில் உடலில் சக்தியிழந்து நொய்ந்து உயிரிழக்கும் சந்தர்ப்பங்களே அதிகமாகும். புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வு சுகாதாரத்துறையின் அறிவுறுத்தலின்படி ஒருவர் தம்மைப்பற்றி முழுமையாக அறிந்து தம்மை இந்நோயின் ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து அதனை மேற்கொண்டு வளர்ந்துவிடாது அதனைக் கட்டுப்படுத்துவதாகும்.

2025-2027 ஆண்டுவரை உலக புற்று நோய் தினம் கொண்டாடப்படுகின்றது. இக்காலப்பகுதியின் கருப்பொருளாக "தனித்துவமாய் இணைவோம் - Unique by unique" ஆகும். புற்றுநோயை அதனை ஆரம்பத்திலேயே கண்டறிந்தால் விரைந்து இல்லாதொழிக்க பலமுறைகள் பாதுகாப்பானதாக பயன்படுத்தப்படுகின்றன. தவறின் காலந்தாழ்த்தினால் அது பரவும் வேகத்தை கட்டுப்படுத்துவதும் புற்றுநோய்க்கலங்களை மட்டுப்படுத்துவதும் சிரமமாகிவிடும். வாழ்க்கையின் எந்த காலகட்டத்திலும் புற்றுநோய் தெரியத்தொடங்கி வாழ்க்கையையே கேள்விக்குறியாக்கி உயிரையும் காவுகொள்கின்றது. இந்நோய் தற்போது பரந்துபட்ட அளவில் பெண்களை பாதிக்கின்றது. ஆண்களும் விதிவிலக்கல்ல என்றாலும் தரவுகளின் படி பெண்களுக்கு அதிகளவில் புற்றுநோய் பரவல் கணிப்பிடப்பட்டிருக்கின்றது. பால் வேறுபாடின்றி வயது வித்தியாசமின்றி சிறுவர் முதல் முதியோர் வரை பலருக்கும் புற்றுநோய் ஏற்படுகின்றது என்பதுடன் பலரது உயிர்களையும் காவுகொண்டுள்ளது என்பது தான் துன்பியலான செய்தியாகும். இதில் பரம்பரையாக இந்த நோய் வருகின்றது என்பதை தவிர்த்துப் பார்த்தால் வேறு பல காரணிகளும் புற்றுநோய் உருவாவதற்கு காரணமாகின்றன.

சுகாதாரத் திணைக்கள தகவலின்படி 25- 35 வரையான வயதுடைய பெண்களுக்கு கருப்பைப் புற்றுநோய், மார்பகப் புற்றுநோய் போன்ற இனப்பெருக்கதொகுதியில் அதிகளவில் ஏற்படுவதாகவும் அதனால் அண்மையிலுள்ள புற்றுநோய் கண்காணிப்பு நிலையத்திற்கு தவறாமல் சென்று தங்களை பரீட்சித்துக் கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றனர். இந்த அறிவித்தலை அதிக பேர் அலட்சியம் செய்வது தெரிகின்றது. புற்றுநோயின் தன்மையை கண்டறிய CA 125 என்னும் இரத்தப் பரிசோதனையும் செய்யப்படுகின்றது. முழுவதுமாக புற்றுநோய்தான் என்பதனை உறுதி செய்யாவிட்டாலும் இதன் கணிப்புகளை புற்றுநோயை உறுதிசெய்ய

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...




பயன்படுத்துகின்றார்கள்.

25 நாள் கீரைக்கு பீடைநாசினி தெளித்தால் தெளித்து 14 நாட்களுக்கு பின்னரேயே சந்தைப்படுத்தல் வேண்டும். அவ்வாறாயின் எப்போது விசிறி எப்போது அறுவடைசெய்வது? இந்த சூட்சுமம் பீடைநாசினி விசிறும் விவசாயிக்கே சமர்ப்பணம். சிறுகீரை என்றுதானே அதற்கு பெயர். ஆனால் கீரை செடியாக அல்லவா விற்பனைக்கு வருகின்றது. அதற்காக அனைத்து விவசாயிகளையும் குறை கூற முடியாது. மக்களுக்கு நல்லனவற்றை விற்க வேண்டும் என்னும் எண்ணம் பலரிடம் இருப்பதனை அசேதன இரசாயனப் பசளைகளையும் பீடைநாசினிகளையும் அறவே தவிர்த்து மாடுகட்டி அதில் பயிர் செய்வதிலிருந்து கண்டு கொள்ளலாம். நஞ்சற்ற மரக்கறிகளை நாடுபவர்கள் இந்த விடயத்தில் அவதானம் தேவை. வீட்டில் ஒரு தோட்டமிருந்தால் இவ்வகை இலைக்கறிகளை நாமே நட்டு அறுவடையும் செய்து தேவைப்படும்போது உணவாக்கலாம். தன்கையே தனக்குதவி என்பது போல தன்னையே நம்பனாமே.

எதுவுமே அறுதியாக இதுதான் புற்றுநோய்க்கான தோற்றுவாய் என பலவேளைகளில் தெளிவில்லை. முன்மொழிவுகளாகவே முன்வைக்கப்பட்டிருக்கின்றன. பாரஉலோகங்களுக்கும் சிறுநீரகச் செயற்பாட்டுக்கும் தொடர்பு இருந்தாலும் புற்றுநோய்க்கான காரணியாக இதுவும் முன்வைக்கப்படுவது சிந்திக்க வைத்துள்ளது. புலால் தவிர்த்து மதுவின்றி வெற்றிலை பாக்கு, புகையிலையை நாள் முழுக்க சொதப்பாத மாதர்க்கும் புற்றுநோய் கண்டிருக்கின்றது. இனப்பெருக்கத் தொகுதியில் வரும் புற்றுநோய்கள் இவை எவற்றிலுமடங்காதவை. அதிலும் பெண்களின் இனப்பெருக்கத் தொகுதியில் கருவறையிலும் மார்பகத்திலும் புற்றுநோய் உருவாவதற்கான தளம் இருக்கின்றதென்பது விதியின் நியதியே. புற்று நோயை ஆரம்பத்தில் கண்டறியப்பட்டால் (Early diagnosis) அவற்றிலிருந்து மீள்வதற்கு வாய்ப்புக்கள் அதிகம் என்றே புற்றுநோய் வல்லுநர்கள் தெரிவிக்கின்றார்கள்.

வாயிலிருந்து குதம் வரை சமிபாட்டுத் தொகுதியில் எந்த இடத்திலும் புற்றுநோய் ஏற்படுவது போல நுரையீரல், இன்னும் உமிழ் நீர் சுரப்பியிலும் இது ஏற்படுகின்றது. நோயை கறையான் புற்றுபோல வளரவிட்டால் பிரச்சினை பெரிதாகிவிடும். கருவறையை சத்திரசிகிச்சை மூலம் அகற்றிவிடுவது மட்டும் சிறந்த பரிகாரமல்ல. மாறாக புற்றுநோய்க் கலங்கள் உற்பத்தியாகின்றதா என பரீட்சித்துப் பார்க்க வேண்டும். ஆண்களின் இனப்பெருக்கத் தொகுதியில் விந்துகளுக்கான ஊட்டச்சத்தை வழங்குவதற்காகவும் விந்தின் அசைவுக்கு ஏதுவான சுரப்பை சுரக்கின்ற புரொஸ்ரேற் (Prostate gland) என்னும் சுரப்பியில் உருவாகும் புற்றுநோயாகும். இது தவிர பல்வேறு புற்றுநோய்களை சுகாதாரத் திணைக்களம் வரிசைப்படுத்தியிருக்கின்றது. எம்மண்ணிலேயே ஆரம்ப நிலையில் தகுந்த சிகிச்சை பெற்று பலர் ஆரோக்கியமாக இருக்கின்றார்கள். இதற்காக தமது வாழ்க்கையை அர்ப்பணித்திருக்கும் வைத்தியர்கள், தாதிமார், வைத்தியசாலை பணியாளர்கள் அனைவரும் கடவுளின் பிள்ளைகளே.

அநேகமான புற்றுநோய்க்கு கதிரியக்க சிகிச்சை (Radiotherapy) மூலமாகவும் தனித்துவமான வேதியியல் மருந்துகளை குருதியோட்டத்தில் ஊசியால் உட்செலுத்தியும் (Chemotherapy) சிகிச்சையளிக்கின்றனர். அறுவை சிகிச்சை (Surgery) மூலம் புற்றுநோய்க் கட்டிகள் (கலங்கள்) அகற்றப்பட்டால் அதனது பெருக்கம் மட்டுப்படுத்தப்பட்டுவிடும். ஆனால் அறுவை சிகிச்சை செய்ய முடியாதிருப்பின் மேற்கூறிய கதிரியக்க மற்றும் வேதியியல் சிகிச்சைகளுக்கு கட்டுப்படாதவறின் விளைவு விபரீதமானது தான். இவற்றைவிட PET-CT Scan மற்றும் CT Scan படங்களின் உதவியுடன் நேரடியாக புற்றுநோய்க்கலங்களை கதிரியக்க சிகிச்சை (Image Guided Radiotherapy – IGRT)) மூலம் சக்தியற்றதாக்கும் வழிமுறையும் உடலில் எதிர்ப்பு சக்தியை தூண்டி புற்றுநோய்க் கலங்களை கட்டுப்படுத்தும் (Immunotherapy) சிகிச்சை முறைகளும் புற்றுநோயை குணப்படுத்த பயன்படுத்தப்படுகின்றன. இதில் புற்றுநோய் கலங்களை முழுமையாக அகற்றுவதென்பது இயலாததென்பதால் அவற்றின் பெருக்கத்தை தடுத்து அல்லது குறைத்து அல்லது செயலிழக்க செய்து நோயேற்பட்டவரின் வாழ் நாளை அதிகரிக்க வாய்ப்புக்கள் உண்டு. ஆனால் இவற்றுக்கான செலவு அதிகமானது.

இங்கிலாந்தில் ஜெனென்டெக்டோச் நிறுவனம் அடிஸோலிசூமாப் (Atizozumab) என்னும் நோயெதிர்ப்பு ஊசிமருந்தை புற்றுநோயைக் குணப்படுத்த கண்டுபிடித்திருப்பதாக செய்தி வெளிவந்திருக்கின்றது. 2024 இல் புற்றுநோய்க்கான மருந்து உலகில் கண்டறியப்படும் என தீர்க்கதரிசி பாபா வங்கா எதிர்வு கூறியிருப்பதும் நினைவில் நிற்கின்றது. பாரம்பரிய வைத்தியத்தில் சொர்க்க மரம் (Simarouba gloaca) என அழைக்கப்படும் மரத்தின் இலைகள் பவுடராக்கப்பட்டு புற்றுநோய் சிகிக்சைக்காக பயன்படுத்தப்படுகின்றது. வேதியியல் சிகிச்சைக்காக பயன்படும் அநேகமான மருந்துகள் தாவரங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவை என்பதும் இதில் கவனிக்கத்தக்கது. இதில் இன்னொரு அம்சமாக பாரம்பரிய மருத்துவத்தையும் சித்த வைத்தியத்தையும் மேலைத்தேய மருத்துவத்தையும் இணைத்த அறிவியல் மூலமான சிகிச்சை முறை இவ்வாறான நோய்களுக்கு தேவைப்படுகின்றது. பாரம்பரிய மருத்துவத்தில் பயன்படும் தாவரங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட மருந்துகளைப் பயன்படுத்தும் மேலைத்தேய மருத்துவம் புற்று நோயை குணமாக்க அனைத்தும் இணைந்ததொரு முறையை பரிந்துரைக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு புதிய செயலாளர் நியமனம்



(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலகத்தின் புதிய பிரதேச செயலராக திருமதி. மணிவண்ணன் உமாமகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கரவெட்டிப் பிரதேச செயலாளராக கடமையாற்றிய ஈ.தயாரூபன் அவர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றதை அடுத்து முல்லைத்தீவு கரைதுறைப் பற்றுப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளராகக் கடைமையாற்றிய திருமதி.மணிவண்ணன் உமாமகள் கரவெட்டி பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளராகத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளமை குறிப் பிடத்தக்கது. (6-8-60)

# (சா/த) மாணவர்களுக்கான இலவச கருத்தமர்வு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகமும் மீசாலை உயர்கலைக் கல்லூரியும் இணைந்து க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான இலவசக் கருத்தமர்வை மீசாலை உயர்கலைக் கல்லூரி மண்டபத்தில் முன்னெடுத்து வருகின்றனர்.

அந்தவகையில் இன்று புதன்கிழமை பி.ப 2 மணிக்கு வரலாற்றுப் பாட கருத்தமர்வும், நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிக்கு தமிழ் பாடக் கருத்தமர்வும் இடம்பெறவுள்ளன.

மேற்படி இலவசக் கருத்தமர்வானது எதிர்வரும் 10.03.2025 வரை இடம்பெறவுள்ள நிலையில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்கள் இதில் பங்கேற்றுப் பயனடைய முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8-30)

# யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் யாழ்.மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளன.

இதில் பி பிரிவினருக்கான போட்டிகள் எதிர்வரும் 15 ஆம் திகதியும், ஏ பிரிவு மற்றும் பெண்களுக்கான போட்டிகள் எதிர்வரும் 22 ஆம் திகதியும் ஆரம்பமாகவுள்ளதாக யாழ் மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கச் செயலாளர் சி.தயாளபாலன் அறிவித்துள்ளார். (6-8-90)

# கீரிமலை நகுலேஸ்வரருக்கு நாளை கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

கீரிமலை நகுலேஸ்வரம் நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரசுவாமி திருக்கோயில் மஹோற்சவம் நாளை வியாழக்கிழமை மு.ப 11.35 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 15 நாட்கள் இடம்பெறவுள்ள மஹோற்சவங்களில் எதிர்வரும் 24 ஆம் திகதி இரவு திருக்கல்யாணமும், 25 ஆம் திகதி இரவு 8 மணிக்கு சப்பறத்திருவிழாவும், மஹாசிவராத்திரி தினமான 26 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 27 ஆம் திகதி பி.ப 5 மணிக்கு கண்டாங்கி தீர்த்தத்தில் தீர்த்தோற்சவமும் இடம் பெறும் என ஆதீன கர்த்தாவும் பிரதம குருவும் அறிவித்துள்ளனர். (6-8)


## தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## வருடாந்த பொதுக்கூட்டம் 2025

**மேற்படி பொதுக்கூட்டம் எதிர்வரும் 09.03.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு தொண்டைமானாறில் அமைந்துள்ள வெளிக்கள நிலையத்தில் நடைபெறும்.**

**அங்கத்தவர்கள் பிரேரணைகள் இருப்பின் 27.02.2025 இற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

(3396)

வெளிக்கள நிலைய அலுவலகம்,
133, செம்மணி வீதி,நல்லூர்,
யாழ்ப்பாணம்.

ஆ.கதிர்காமநாதன்
செயலாளர்.




யா/கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் தரம் 1 இற்கான கால்கோள்விழா கடந்த மாதம் 30 ஆம் திகதி வித்தியாலய அதிபர் க.தவகீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.


## நடுக்கட்டு சேவைக்கான விண்ணப்பம் கோரல்-2025

யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஆதனவரி அறவீடுகளை மேற்கொள்வதற்கு ஆதனவரிப் பகுதியின் கீழ் கடமையாற்றுவதற்கு நடுக்கட்டு சேவைக்கான (15பேர்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரி உடல் ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும் அத்துடன் யாழ் மாநகரசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. விண்ணப்பப்படிவத்தினை மாநகரசபையில் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் பிறப்புசான்றிதழ், கல்விச்சான்றிதழ், தேசியஅடையாள அட்டை, கிராமசேவையாளரின் நற்சான்றிதழ் மற்றும் வதிவிடச்சான்றிதழ் என்பவற்றின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.
3. நடுக்கட்டு சேவைக்கு தெரிவு செய்யப்படுபவருக்கு, அவரால் சேகரிக்கப்படும் ஆதனவரி (கடந்த வருடங்களில்) நிலுவைத்தொகையின் 12%ஆன தொகை தரகு(Commission) அடிப்படையிலான கொடுப்பனவாக வழங்கப்படும். அவரால் மாதாந்தம் சேகரிக்கப்படும் தரகுப்பணத்தின் 8% இனை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும். சேகரிக்கப்படும் தரகுப்பணத்தின் 12% ஆன தொகை சபையினால் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும், 3% ஆன தொகை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்பு செய்யப்படும்.
4. நடுக்கட்டு சேவைக்கு இணைக்கப்படும் நடுக்கட்டு உத்தியோகத்தர் ரூபா இருபத்தையாயிரத்தை (25,000.00) மீளளிக்கக்கூடிய பிணைப்பணமாக செலுத்துதல் வேண்டும்.
5. கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் "நடுக்கட்டு சேவைக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு 2025.02.25 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ கிடைக்கக்கூடியதாக "ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கவேண்டும்.
6. நடுக்கட்டு உத்தியோகத்தர் சேவைக்கு தெரிவு செய்யப்பட்டோர் இங்கு சேவையாற்றியதன் அடிப்படையில் சபையின் எந்தவொரு நிரந்தர பதவிக்கான நியமனத்தையும் கோரமுடியாது.
7. நியமனம் தொடர்பான இறுதித் தீர்மானம் ஆணையாளரால் மேற்கொள்ளப்படும்.

(சி-2245)

மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.



## மணிவிழா வாழ்த்துகள்




திருமதி.
அன்ரெலா ஜெறீன் சஞ்ஜே பெனடிக்ற்
SLTS-I (Trained)
சேவைக் காலம் 35 வருடங்கள்
(1990–2025)

எமது பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றி 12.02.2025 இன்று ஓய்வு பெற்றுச் செல்லும்

திருமதி. அன்ரெலா ஜெறீன் சஞ்ஜே பெனடிக்ற்
அவர்களை ஓய்வு காலத்தில் சீரும்,சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

(3386)

ஆசிரியர் நலன்புரி கழகம்
யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# கைதிகள் விடுவிப்பை நிறுத்துவதாக அறிவித்த ஹமாஸ் அமைப்பு

**(ஜெருசலேம்)** — இஸ்ரேலிய பணயக்கைதிகளை விடுவிப்பதை நிறுத்துவதாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஹமாஸ் அறிவித்தது.



இந்த அறிவிப்பின் போது, பாலஸ்தீனிய போராளிக்குழு காசாவில் போர்நிறுத்த ஒப்பந்தத்தை இஸ்ரேல் மீறுவதாகக் குற்றம் சாட்டியதுடன், மோதலை மீண்டும் அதிகரிக்கும் அபாயத்தையும் ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

கடந்த மூன்று வாரங்களாக நடந்ததைப் போல இஸ்ரேலிய காவலில் வைக்கப்பட்டுள்ள பாலஸ்தீனியக் கைதிகள் மற்றும் பிற பாலஸ்தீனியர்களுக்கு ஈடாக எதிர்வரும் சனிக்கிழமை அதிகமான இஸ்ரேலிய பணயக்கைதிகளை ஹமாஸ் விடுவிக்க இருந்தது.

இதனை சனிக்கிழமை திட்டமிடப்பட்ட பணயக் கைதிகள் விடுவிக்கப்படுவதற்கு முன்னர் தனது அறிவிப்பை வெளியிட்டதாக ஹமாஸ் கூறியது.

இதனிடையே, ஹமாஸின் நடவடிக்கை போர் நிறுத்தத்தை மீறியதாக இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஜ் தெரிவித்தார்.

மேலும் காசாவை உள் நாட்டுப் பாதுகாப்பிற்காக இராணுவத்தை தயார் நிலையில் இருக்கும்படியும் அறிவுறுத்தினார்.

ஜனவரி 19 ஆம் திகதி போர் நிறுத்தம் தொடங்கியதில் இருந்து, 566 பாலஸ்தீனியக் கைதிகளுக்கு ஈடாக 16 இஸ்ரேலியர் மற்றும் ஐந்து தாய்லாந்து பணயக் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். (நி-8)




# விமானங்கள் மோதி விபத்து
## ஒருவர் உயிரிழப்பு, பலர் படுகாயம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் அரிசோனாவில் உள்ள விமான நிலையத்தில் இரண்டு ஜெட் விமானங்கள் மோதி விபத்து ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

விமான நிலையத்தில் தரை யிறங்கும்போது ஒரு ஜெட் விமானம் ஓடுபாதையில் இருந்து விலகி, விமான நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த மற்றொரு ஜெட் விமானத்துடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

விமானத்தின் தரையிறங்கும் கியர் தரையிறங்கும் போது செயலிழந்தது.

இதனால் விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் பலர் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து அந் நாட்டு பாதுகாப்புப் படையினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அமெரிக்காவில், கடந்த மாதத்தில் இருந்து இதுவரை ஐந்து விமான விபத்து சம்பவங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# பிரான்ஸ் சென்
## கட்டி அணைத்து வரவே

(பாரிஸ்)

பாரிஸில் நடைபெறும் செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டிற்கு தலைமை தாங்க சென்றிருக்கும் பிரதமர் மோடியை அந்நாட்டு ஜனாதிபதி இமானுவேல் மெக்ரோன் கட்டியணைத்து வரவேற்றார்.



இதன்பிறகு நடந்த இரவு விருந்தில் பிரான்ஸில் உள்ள அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி.வான்ஸை பிரதமர் மோடி சந்தித்தார்.

பிரான்ஸில் ஜனாதிபதி மெக்ரோனை சந்தித்தது

# போனில் ஸ்பீக்கரில்
# 207 டொலர் அப

(பாரிஸ்)

பிரான்ஸ் நாட்டின் நான்டெஸில் உள்ள ஒரு ரயில் நிலையத்தில் தனது செல் போனில் ஸ்பீக்கரை ஒன் செய்து பேசியதற்காக நபரொருவருக்கு 207 அமெரிக்க டொலர் அபராதம் விதிக்கப்பட்டது.

ரயில் நிலையத்தில் குறித்த நபர் தனது சகோதரியுடன் போனில் ஸ்பீக்கரை ஒன் செய்து பேசிக்கொண்டிருந்தபோது ரயில்வே அதிகாரி ஒருவர் அவரிடம் வந்து ஸ்பீக்கரை 'ஓப்' செய்யாவிட்டால் 154 அமெரிக்க டொலர் அபராதம் விதிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

ரயில்வே அதிகாரி கிண்டலடிக்கிறார் என்று அவர் அப்போது நினைத்துள்ளார். ஆனால் அவர் அதன்பின்னும் ஸ்பீக்கரை ஓப் செய்யாததால் அவருக்கு 207 அமெரிக்க டொலர் அபராதம் விதிக்கப்பட்டது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணயக் கைதிகளை விடுவிக்காவிட்டால் அமைதி ஒப்பந்தம் ரத்தாகும்!

## ட்ரம்ப் எச்சரிக்கை



**(வோஷிங்டன்)**

**காசாவில் இருந்து எதிர்வரும் சனிக்கிழமைக்குள் இஸ்ரேலிய பணயக்கைதிகளை விடுவிக்காவிட்டால், அமைதி ஒப்பந்தம் ரத்தாகும் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

மேற்காசிய நாடான இஸ்ரேல் மற்றும் காசா. உள்ளிட்ட பாலஸ்தீனப் பகுதிகளை கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஹமாஸ் பயங்கரவாதிகள் இடையே, 2023, ஒக்., 7இல் போர் தொடங்கியது. அமெரிக்கா, கட்டார், எகிப்து ஆகியவற்றின் மத்தியஸ்த முயற்சியால், போரை நிறுத்துவதற்கான ஒப்பந்தம் சமீபத்தில் கையெழுத்தானது.

ஹமாஸ் பயங்கரவாதிகள் பிடித்துச்சென்ற பணயக் கைதிகளை விடுவிக்கவும், அதற்காக இஸ்ரேல் சிறையில் உள்ள பாலஸ்தீனர்களை விடுவிக்கவும் முடிவு செய்யப்பட்டது. இதன்படி, பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கூறியுள்ளதாவது, அனைத்து இஸ்ரேலிய பணயக்கைதிகளையும் எதிர்வரும் சனிக்கிழமை 12 மணிக்குள் திருப்பி அனுப்பாவிட்டால் அமைதி ஒப்பந்தத்தை ரத்து செய்வதற்கு இதுவே சரியான நேரம் என நான் கருதுவேன்.

அனைத்து இஸ்ரேலிய பணயக்கைதிகளும் விடுவிக்கப்பட வேண்டும். கொஞ்சம் கொஞ்சமாகவோ அல்லது மொத்தமாகவோ விடுவிக்கப்பட வேண்டும். இந்தக் காலக்கெடு குறித்து இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுடன் பேசுவேன் என அவர் தெரிவித்தார். (நி-8)

# ...ன்ற மோடியை ...ரவேற்றார் மெக்ரோன்



...குறித்து எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர் மோடி, "எனது நண்பர் மெக்ரோனை பாரிஸில் சந்தித்ததில் மகிழ்ச்சி" என்று குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகள் சுற்றுப் பயணமாக முதலில் பிரான்ஸ் சென்றுள்ள பிரதமர் மோடி செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட பிறகு, அமெரிக்கா செல்கிறார்.

அமெரிக்காவில் ஜனாதிபதி ட்ரம்பை சந்தித்துபேச பிரதமர் மோடி திட்டமிட்டுள்ளார். (நி-8)

# ...ரில் பேசியதற்காக ...அபராதம் விதிப்பு

...ல்பீக்கரை
...4 அமெ
... விதிக்
...துள்ளார்.
... கிண்ட
...அப்போது
...ல் அவர்
...ரை ஒப்
...கு 207
...பராதம்
(நி-8)



# 115 அடி பள்ளத்தில் வீழ்ந்த பேருந்து

### 55 பேர் உயிரிழப்பு




(குவாத்தமாலா)

குவாத்தமாலா தலைநகரின் புறநகர்ப் பகுதியில் உள்ள பாலத்தின் மீது சென்று கொண்டு இருந்த பயணிகள் பேருந்து ஒன்று பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை அதிகாலை இடம்பெற்ற இந்த விபத்தில் குறைந்தது 55 பேர் உயிரிழந்துள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சம்பவ இடத்தில் 53 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் காயமடைந்த பயணிகளைச் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது அங்கு இருவர் உயிரிழந்துவிட்டதாகவும் அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

பல வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதால் பேருந்து சாலையில் இருந்து விலகி பாலத்தின் கீழே உள்ள செங்குத்தான 115 அடி பள்ளத்தாக்கில் அதிகாலையில் விழுந்து விபத்துக்குள்ளானதாக அந்நாட்டு தீயணைப்புத் துறை செய்தித் தொடர்பாளர் எட்வின் வில்லக்ரன் தெரிவித்தார். பாதிக்கப்பட்டவர்களில் சிறுவர்களும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40,000 இதய, சிறுநீரக நோயாளிகள் காத்திருப்புப் பட்டியலில்

(கொழும்பு)

**அரச மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சைக்காக 40,000 இற்கும் மேற்பட்ட இதய மற்றும் சிறுநீரக நோயாளிகள் காத்திருப்போர் பட்டியலில் இருப்பதால், அவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் அபாயம் உள்ளதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.**

இது தொடர்பாக சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்கள் சங்கத்தின் தலைவர், சிறப்பு மருத்துவர் சமல் சஞ்சீவ தெரிவிக்கையில்,

இதய பரிசோதனைகள் மற்றும் அறுவை சிகிச்சைகளுக்காக 20,000 இற்கும் மேற்பட்டோர் காத்திருப்போர் பட்டியலில் இருப்பதாக்வும், சிறுநீரக ட்யாலிசிஸ் மற்றும் அறுவை சிகிச்சைகளுக்காக 20,000 இற்கும் மேற்பட்ட நோயாளிகள் காத்திருப்போர் பட்டியலில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி, காலி, அநுராதபுரம், மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை, மாத்தறை, பொரளை லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் மருத்துவமனை, மாளிகாவத்தை சிறுநீரக மருத்துவமனை உள்ளிட்ட பல மருத்துவமனைகளின் காத்திருப்புப் பட்டியலில் இந்த நோயாளிகள் அறுவை சிகிச்சைக்காகக் காத்திருக்கிறார்கள்.

தனியார் மருத்துவமனைகளில் இந்த அறுவை சிகிச்சைகளைச் செய்வதற்கு குறைந்தபட்சம் ரூ.1 மில்லியனுக்கும் அதிகமாக செலவாகும் என்பதால், அரசாங்கம் தலையிட்டு சில நிதி உதவிகளை வழங்கி, தனியார் மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சைகளைச் செய்ய அனுமதிக்க வேண்டும் என்று சிறப்பு மருத்துவர் சமல் சஞ்சீவ மேலும் தெரிவித்தார். (நி-8)

# வடக்கு ஆளுநரை சந்தித்த சீனத் தூதரகத்தின் குழுவினர்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் இலங்கைக்கான சீனத்துாதரகத்தின் பொறுப்பதிகாரி ஜ் யான்வேய் தலைமையிலான குழுவினருக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் காலை இடம் பெற்றது.

வடக்கு மாகாணத்தில் விவசாயம், சுற்றுலாத்துறை அபிவிருத்தியின் தேவைப்பாடுகள் தொடர்பில் ஆளுநர், சீனத் தூதரகத்தின் பொறுப்பதிகாரிகளுக்கு தெரியப்படுத்தினார்.

மேலும் வடக்கில் வேலை வாய்ப்பு உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் ஆளுநர் இதன்போது குறிப்பிட்டார்.

வடக்கிலுள்ள மீனவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியதாகவும் அவர்கள் பல்வேறு தேவைகளை நிறைவேற்றித்தருமாறு தம்மிடம் கோரிக்கை முன்வைத்ததாக சீனத் தூதரகத்தின் பொறுப்பதிகாரி ஆளுநரிடம் தெரிவித்தார். அத்துடன் தமது உதவிகள் வழங்கல்களில் எந்தவொரு பாரபட்சமும் இல்லை என்பதையும் ஆளுநருக்கு அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலனும் பங்கேற்றார். (6-8)

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் பாடிய உரும்பையம்பதி பேய்ச்சி அம்மன் திருவந்தாதி நூல் வெளியீட்டு விழா இன்று புதன் கிழமை பி.ப 3 மணிக்கு இணுவில் கந்தசுவாமி கோயிலடி அறிவாலயத்தில் சிவாகமமட முதல்வர் கு.பார்த்திபன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (6-8)

# வாகன இறக்குமதிக்கு தயங்கும் இறக்குமதியாளர்கள்

(கொழும்பு)

இலங்கையில் வாகன இறக்குமதி செய்யக்கூடிய இறக்குமதியாளர்கள், தற்போது வாகன இறக்குமதிக்குத் தயக்கம் காட்டி வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

வாகன இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட போதிலும், பெருமளவில் வாகனங்களை இறக்குமதி செய்வதில் இறக்குமதியாளர்கள் ஆர்வம் காட்டவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

வாகன இறக்குமதிகளின் போதான கடுமையான கட்டுப்பாடுகள் மற்றும் வாகனங்களுக்கான வரி விதிப்பு போன்ற காரணிகளினால் இவ்வாறு இறக்குமதியாளர்கள் தயக்கம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக கொள்வனவாளர்களைத் தேடிக்கொள்வதில் நிலவும் சிரமங்களினால் வாகன இறக்குமதி மந்த கதியில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் வாகனம் தேவைப்படுவோர் முன்பதிவு செய்வதன் அடிப்படையில் தற்பொழுது வாகன இறக்குமதியாளர்கள் வாகனங்களை வரையறுக்கப்பட்ட அடிப்படையில் இறக்குமதி செய்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இறக்குமதியாளர்கள் ஊடாக வாகனம் கொள்வனவு செய்யப்படும் போது கொள்வனவு செய்வோர் மீது மேலதிக வரி விதிக்கப்படுவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதனால் வாகனங்களின் விலைகள் அதிகரிப்பதாக இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளதுடன் பெரிய வாகன இறக்குமதி நிறுவனங்கள் கூட முன்பதிவு அடிப்படையில் மட்டும் வாகனங்களை இறக்குமதி செய்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)




**நாளை 13-02-2025 காரைநகர் மாணிக்கவாசகர் மடாலயத்தில் திருவாசக முற்றோதல் ஈழத்து திண்ணபுரம் சிவன் கோவில் கும்பாபிஷேகம் காண்போம்**

மணிவாசகர் திருவடிகள் சரணங்கள்

துண்ட வெண்பிறை சூடியைக் கண்டுகற்
கண்டெ னச்சர்க கரையெனத தேனென
வண்ட மிழ்த்திரு வாசக மோதிய
தொண்டர் நாதன் றுணையடி போற்றுவோம்.

நாளை 13.02.2025 காரைநகர் மாணிக்கவாசகர் மடாலயத்தில் திருவாசக முற்றோதல் எல்லா அடியார்களும் ஓதுவோம். மாசி மகம் திருவாசகம் ஓதி திண்ணபுரம் சிவன் கோயில் ஈழத்துச் சிதம்பரம் கும்பாபிஷேகம் காண்போம். ஆலய அமைதியைப் பிரார்த்தித்து ஐந்து வருடமாக மடாலயத்தில் மகம் நட்சத்திரத்தில் ஓதியது. கடந்த இரு வருடமாக ஆலயம் கும்பாபிஷேகம் காணவேண்டும் என 'கண்டனச் சார் கரையெனத்தேனை வண்டமிழ்த்திரு வாசகம் ஓதிய தொண்டர் நாதன் மாணிக்கவாசகன் திருவடியைத் துணையாக போற்றுவோம்.' ஈழத்து சிதம்பரம் கும்பாபிஷேகம் காண்போம்.

மகேஷ்வரப் பூசையும்-மாணிக்கவாசகர் அபிசேகமும். நடைபெறும்.


மாணிக்கவாசகர் திருவடி சரணங்கள்.



க.கு.க சிவபாலன்,
போசகர்,
காரைநகர் ஈழத்துச் சிதம்பரம், மாணிக்கவாசகர் மடாலயம்.

(சி-2244)


# நுவரெலியாவில் பனிக்கட்டிகள்



(ஹற்றன்)

நுவரெலியாவில் நேற்றுக் காலை வேளையில் பனிக்கட்டிகள் விழுந்துள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களுக்கு இடையில், காலநிலை மாற்றத்தால், நுவரெலியாவில் உறைபனி விழும்.

ஆனால் இந்த முறை நுவரெலியாவில் நேற்றுக் காலை வேளையில் அதிக பனிக்கட்டிகள் விழுந்துள்ளன. (நி-8)

# புதுத்தம்பதிகளுக்கு வீட்டுக்கடன்

(கொழும்பு)

புதிதாக திருமணமான தம்பதிகளுக்கு வீடு கட்ட கடன் வழங்கும் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வீட்டுத்திட்டம் ஒரு முன்னோடித் திட்டமாக ஆரம்பிக்கப்படும் என அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

எனினும் வீடு கட்டுவதற்கு எவ்வளவு தொகை வழங்க வேண்டும் என்பது குறித்து இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் அதற்கான கடன் தொகை அரச வங்கிகளால் வழங்கப்பட உள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூசணி அம்பாள் தேவஸ்தான புனராவர்த்தன அஷ்டபந்தன சமர்ப்பன உத்தமோத்தம த்ரயத் திரும்சந் (33). குண்டபஷ மகாயாக பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

## ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ். நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட மணல் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது என யாழ்.நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (6-8)

# இணுவில் கந்தனின் பால்குடப்பவனி



(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசுவாமி கோயில் பால்குடப்பவனி நேற்று பக்தி பூர்வமாக இடம் பெற்றது.

மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்தில் நேற்றுக் காலை 6 மணிக்கு ஆரம்பமான பால்குடப்பவனியானது இணுவில் கந்தசுவாமி கோயில் வரை சென்று அங்குள்ள ஆறுமுகப் பெருமான் சமேத வள்ளி தெய்வானைக்கு பக்தர்களால் கொண்டு வரப்பட்ட பாலினால் அபிஷேகம் செய்யப்பட்டது.

இதன்போது பல பக்தர்கள் தமது நேர்த்திக் கடன்களிலும் ஈடுபட்டு இருந்தனர். (6-8)





## கொழும்புத்துறை ம.வி மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணியளவில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் க.தவகீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிரதேச செயலர் சா.சுதர்சன், சிறப்பு விருந்தினராக யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய முன்னாள் பிரதி அதிபர் திருமதி.நளினி ரவீந்திரன், யா/வண்ணை ஸ்ரீ வைத்திலிங்க வித்தியாலய அதிபர் இ.ராஜ்கரன் மற்றும் கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கத் தலைவர் க.குணரட்ணம், லோ.நிசாந்தன் (பழைய மாணவர்), திருமதி.சந்திரகுமாரன் வசந்தராணி (பழைய மாணவி) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6-8)

## கண்ணிவெடி அகற்றும் பணிகளை பார்வையிட்ட ஜப்பான் தூதுவர்



(கண்டாவளை)

இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜப்பானிய தூதுவர் அகிஜோ இசோமட்டா தூதரக அதிகாரிகள் நேற்றுக் காலை கிளிநொச்சி பளை மற்றும் முகமாலைப்பகுதிக்குச் சென்று கண்ணிவெடி அகற்றும் நிறுவனப்பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியதுடன் கண்ணிவெடி அகற்றும் பணிகளையும் பார்வையிட்டுள்ளனர்.

அந்தப் பகுதியில் வெடி பொருட்கள் மிக ஆபத்தான நிலையில் காணப்படுவதாகவும் மீள்குடியேற்றத்திற்குப் பின்னர் வெடிபொருட்களினால் உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளதுடன், பலர் காயமடைந்துள்ளதாகவும் கண்ணிவெடி அகற்றும் நிறுவனப்பிரதிநிதிகள் இதன்போது தெரிவித்தனர்.

இந்நிலையில், பளை மற்றும் முகமாலைப் பகுதியில் ஜப்பான் நிதிப்பங்களிப்புடன் டாஸ், கலோரெஸ்ட் மற்றும் சாப் நிறுவனத்தினால் கண்ணிவெடி அகற்றும்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-8-315-316)

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் தைப் பூச நிகழ்வு நேற்று மாவட்ட செயலகத்தில் முல்லைத் தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். குணபாலன் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. (படம்: சதீஸ்)

## தோணிக்கல் பகுதியில் 2 கிலோ கஞ்சா மீட்பு

## இளைஞன் கைது

(குருமன்காடு)

வவுனியா, தோணிக்கல் பகுதியில் 2 கிலோ கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் 34 வயதுடைய இளைஞர் ஒருவர் 2 கிலோ கஞ்சாவினை உடைமையில் வைத்திருந்தமை சோதனை நடவடிக்கையின் போது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து கஞ்சா மீட்கப்பட்டதுடன் குறித்த இளைஞரும் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (6-8-250)

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

சீவரத்தினம், செல்வராசா, வேலும் மயிலும் ஆகியோரின் ஞாபகார்த்த இரத்ததான முகாம் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கரவெட்டி, கன்பொல்லை செஞ்சுடர் விளையாட்டுக்கழகத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே குறித்த இரத்ததான முகாமில் தன்னார்வளர்களை கலந்து கொண்டு குருதித்தானம் வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)

## சபாநாயகரைச் சந்தித்தார் கியூபா தூதுவர்

(கொழும்பு)

இலங்கைக்கான கியூபா தூதுவர் ஆண்ட்ரேஸ் மார்செலோ கோன்சாலஸ் அண்மையில் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவை சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் கலந்துகொண்டார்.

சபாநாயகருக்குத் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்த கியூபா தூதுவர், இலங்கையுடனான ஒத்துழைப்புக்களை மேலும் விஸ்தரிப்பதற்கு கியூபா தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 700



உன் பேரில் தப்பு இல்லை. இளவரசரைப் பற்றிய செய்தி வந்ததிலிருந்து உன் புத்தியே பேதலித்து விட்டது. இப்போதுதான் கொஞ்சம் தெளிவாகப் பேச ஆரம்பித்திருக்கிறாய்!

வானதி சிறிது நேரம் மௌனமாயிருந்துவிட்டு அக்கா! நாம் எந்த ஊருக்குப் போகிறோம் என்று சொன்னீர்கள்? என்றாள்.

ஆனைமங்கலத்துக்கு. "அது எங்கே இருக்கிறது?" நாகைப்பட்டினத்துக்கு அருகில் கடற்கரை ஓரத்தில் இருக்கிறது. நீ ஏதோ சொப்பனம் கண்டு உளறினாயே, அந்தச் சூடாமணி விஹாரத்துக்கும் ஆனைமங்கலத்துக்கும் கொஞ்ச தூரந்தான். நீ புத்த பிக்குணியாவதாயிருந்தால் கூட அதற்கும் சௌகரியமாகவேயிருக்கும். ஆனால் நீ மணிமேகலையாவதற்கு அவசரப்பட வேண்டாம். பொன்னியின் செல்வனைப் பற்றித் திடமான செய்தி கிடைத்த பிறகு முடிவு செய்து கொள்ளலாம்! என்று குந்தவை கூறி விட்டு இலேசாகச் சிரித்தாள்.

"அக்கா! இது என்ன நீங்கள் சிரிக்கிறீர்கள்! சிரிப்பதற்கு எப்படி உங்களுக்கு மனம் வருகிறது? இளவரசர் பிழைத்திருப்பார் என்று உங்களுக்கு அவ்வளவு நம்பிக்கை இருக்கிறதா?"

"நம்பிக்கை இல்லாவிட்டால், நான் இப்படி இருப்பேனா வானதி! நான் பார்த்து வைத்திருக்கும் ஜோசியங்கள் எல்லாம் பொய்யாகப் போவதில்லை. என் தம்பியின் கையில் உள்ள சங்கு சக்கர ரேகைகளும் பொய்யாகப் போவதில்லை. இது வரையில் எல்லாம் சரியாகத்தான் நடந்து வருகிறது." என்ன சரியாக நடந்து வருகிறது? எனக்கு ஒன்றும் தெரியவில்லையே? என்றாள் வானதி.

"உனக்கு ஏன் தெரியப் போகிறது? நீ தான் சித்தப் பிரமை பிடித்து அலைகிறாயே? அருள்மொழிக்கு இளம் வயதில் பல கண்டங்கள் நேரும் என்று சொன்னார்கள். அதன்படி நேர்ந்து வந்திருக்கின்றன. பின்னே மற்றவையும் நடந்து தானே ஆக வேண்டும்?" மற்றவை என்றால்?

"எத்தனையோ தடவை நான் சொல்லியாகிவிட்டது. நீயும் கேட்டிருக்கிறாய் மறுபடி எதற்காகச் சொல்லச் சொல்லுகிறாய்? பேசாமல் தூங்கு! பொழுது விடிந்ததும் பார்த்துக் கொள்ளலாம்."

வானதி மீண்டும் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்து விட்டு, "இராத்திரியெல்லாம் யானை மீது பிரயாணம் செய்யப் போகிறோமா அக்கா! எதற்காக?" என்று கேட்டாள்.

"அதுகூடவா உனக்கு ஞாபகம் இல்லை? பகலில் நாம் பிரயாணம் செய்தால் வழியில் உள்ள ஊர்களிலெல்லாம் ஜனங்கள் நம்மைச் சூழ்ந்து கொள்வார்கள். "பொன்னியின் செல்வன் எங்கே?" "சோழ நாட்டின் தவப்புதல்வன் எங்கே?" என்று கேட்பார்கள். பழுவேட்டரையர் மீது குற்றம் சுமத்துவார்கள். பழுவூர் இளைய ராணியைச் சபிப்பார்கள். சக்கரவர்த்தியைக் கூட நிந்தித்தாலும் நிந்திப்பார்கள். அதையெல்லாம் நாம் எதற்காகக் காதினால் கேட்க வேண்டும்? நான் தான் ஜனங்களை அப்படியெல்லாம் தூண்டி விட்டதாகப் பழுவேட்டரையர்கள் சொன்னாலும் சொல்லுவார்கள்! எதற்காக இந்த வம்பு என்றுதான் இராத்திரியில் புறப்பட்டேன். இதையெல்லாம் பழையாறையிலிருந்து புறப்படும் போதே உனக்குச் சொன்னேன் மறுபடியும் கேட்கிறாய்.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## முயற்சி செய்யாதவர்களுக்கு கடவுள் உதவமாட்டார்



பூஞ்சோலை என்பது ஓர் அழகான கிராமம். அந்தக் கிராமத்தில் எங்கு பார்த்தாலும் 'பச்சைப் பசேல்' என்று பயிர்கள் வளர்ந்து காண்போர் கண்களுக்கு விருந்தளித்தன. அவ்வூரில் மணிவண்ணன் என்பவன் வாழ்ந்து வந்தான்.

அவன் நல்லவன்தான். எனினும் எந்த ஒரு பிரச்சினையிலும் முயற்சி செய்யாமல் கடவுள் தன்னைக் காப்பாற்றுவார் என்றே எண்ணுவான். தனக்குத்தானே எவன் ஒருவன் உதவி செய்து கொள்கிறானோ அவனுக்குத்தான் இறைவனும் உதவுவார் என்ற கருத்து அவனது நெஞ்சில் பதியாமல் போனது.

அவனுடைய நெருங்கிய உறவினர் திருமணம் பூஞ்சோலைக் கிராமத்திற்கு அடுத்ததாக இருந்த கிளியனூரில் நடைபெறுவதாக இருந்தது.

மணிவண்ணனும் அந்தத் திருமணத்தில் கலந்து கொள்வதற்காகத் தனது மாட்டுவண்டியில் சென்று கொண்டிருந்தான். கிளியனூரை அடைகின்ற வேளையில் ஒரு பெரிய பள்ளத்தில் வண்டிச் சக்கரங்கள் புதைந்து விட்டன. மாடுகளும் சேற்றில் சிக்கிய தமது கால்களை எடுக்க முடியாமல் தவித்தன.

மணிவண்ணன் மிகவும் பயந்து விட்டான். சேற்றில் சிக்கிக் கொண்ட வண்டியின் சக்கரங்களையும் மாடுகளையும் எப்படி மீட்பது என்று அவனுக்குத் தெரியவில்லை. மாடுகளாவது சேற்றில் சிக்கிய தமது கால்களை எடுக்க முயற்சி செய்து கொண்டிருந்தன. ஆனால், மணிவண்ணனோ எவ்விதச் சிறு முயற்சியையும் செய்யாமல் விழித்துக்கொண்டிருந்தான்.

உடனே அவன் "கடவுளே. என்னை இந்தத் துன்பத்திலிருந்து காப்பாற்று" என்று வேண்டினான். உடனே வானிலிருந்து ஒரு குரல் கேட்டது. "மனிதனே, நீ சேற்றில் சிக்கிய உன் மாடுகளையும், வண்டியின் சக்கரங்களையும் மீட்பதற்கு சிறிதளவு கூட முயற்சியே செய்யவில்லை.

வெறுமனே என்னை அழைப்பதில் எந்தப் பயனும் இல்லை. முதலில் தன்னால் ஆன முயற்சியைச் செய்பவர்களுக்குத்தான் நான் உதவுவேன். முதலில் உனது தோள் வலிமையால் சேற்றில் சிக்கிய சக்கரங்களை வெளியே எடுக்க முயற்சி செய். பிறகு மாடுகளை அதட்டி ஓட்டு. இந்த வேலைகளெல்லாம் உன்னால் செய்ய முடிந்தவைகள் தான். அதற்குப் பின் என்னை உதவிக்கு அழை. நான் வருவேன். முயற்சி செய்யாதவர்களுக்கு நான் நிச்சயம் உதவ மாட்டேன்" என்று கூறியது.

உடனே மணிவண்ணன் தனது தோள் பலத்தால் சக்கரத்தில் முட்டுக்கொடுத்து வண்டியைத் தூக்கி நிறுத்தி மாடுகளை அதட்டி ஓட்டினான். இப்பொழுது வண்டி சேற்றிலிருந்து மீண்டது. மணிவண்ணன் முயற்சியின் சிறப்பை அறிந்து கொண்டான். கடவுள் வானிலிருந்து அவனை ஆசிர்வதித்தார்.

நீதி : முயற்சி செய்யாதவர்களுக்குக் கடவுள் உதவ மாட்டார். எனவே நாம் வெற்றி பெற நம்மாலான முயற்சியைச் செய்ய வேண்டும். இறைவன் அருள் நமக்குத் தானாகவே கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

> சுதந்திரம் என்பது, சரியான செயலை செய்வதை எவரும் தடுக்க முடியாத நிலையும், தவறான செயலை செய்யத் தூண்டாத நிலையுமாகும். ~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இனவாதத்தை தூண்டிவிடாதீர்கள்

தையிட்டி விகாரையை இடிக்க வேண்டும் என்ற சிலரின் நிலைப்பாடு குறித்து வாதப் பிரதிவாதங்கள் எழுந்துள்ளன.

விகாரை அமைக்கப்படும்போது அதைத் தடுத்திருக்கலாம். விகாரையை அமைக்க விடாமல் போராட்டம் நடத்தியிருக்கலாம். சரி. விகாரைக்கான அத்திபார வேலைகள் நடக்கும்போதேனும் அதனை அகற்றுமாறு கூறியிருக்கலாம்.

ஆனால் அப்போதெல்லாம் பேசாதிருந்தவர்கள் இப்போது தையிட்டி விகாரையை உடைக்க வேண்டும் எனக் கோசமிடுவது எதற்காக என்ற கேள்வி தமிழ் மக்களிடம் உண்டு.

அதேநேரம் தையிட்டி விகாரை அமையப் பெற்ற நிலம் தனியாருக்குச் சொந்தமானது.

எனவே தனியாரின் காணிக்குள் விகாரை அமைக்கப்பட்டமை சட்டவிரோதமானது.

ஆகவே அதனை உடைக்க வேண்டும் என தர்க்கிப்போரும் உளர்.

இங்கு யார் கூறுவதில் நியாயம் உண்டு என்ற பட்டிமன்றம் தேவையற்றது.

ஆம், தையிட்டியில் கட்டப்பட்ட விகாரை தொடர்பில் நாங்கள் கருத்துக்களை முன்வைப்பதென்பது மிகப் பெரும் பின்விளைவுகளை ஏற்படுத்தும்.

அதாவது, விகாரையை உடைக்க வேண்டும் என்று நாம் கூறும்போது, அது இந்த நாட்டில் வன்முறையை உருவாக்கி தென்பகுதியில் ஓர் இனக்கலவரத்தை ஏற்படுத்துகின்ற நோக்கத்தை உடையதோ என்று எண்ணுகின்ற அளவில் நிலைமையுள்ளது.

ஆக, சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட தையிட்டி விகாரை தொடர்பில் இந்த நாட்டின் உயர்நீதிமன்றத்தை நாடுவதுதான் புத்திசாலித்தனம்.

இணைந்த வடக்கு கிழக்கைப் பிரிக்க வேண்டும் எனக் கோசமிடாமல் வடக்கு கிழக்கை பிரிக்க வேண்டும் என்ற மனுவோடு உயர் நீதிமன்றத்தை நாடிய ஜே.வி.பி உயர் நீதிமன்றத்தினூடாக வடக்குக் கிழக்கைப் பிரித்துவிட்டு மௌனமாக இருந்தது.

அதே நேரம் உயர்நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டதன் காரணமாக, நாமும் அது தொடர்பில் பேசாமல் இருந்துவிட்டோம்.

எனவே தையிட்டி விகாரையை உடைக்க வேண்டும் என்று நம்மில் எவர் கூறினாலும் அதன் விளைவு தென்பகுதியில் பெரும் இனவன்மத்தை ஏற்படுத்தும்.

எனவே தையிட்டியில் அமைக்கப்பட்ட விகாரை தனியார் நிலத்தில் அமைக்கப்பட்டதன் காரணமாக அது தொடர்பில் நிலச் சொந்தக்காரர்கள் உயர் நீதிமன்றத்தை நாடுவது தான் அறிவார்ந்த விடயம்.

இங்கு சம்பந்தப்பட்டவர்களுக்குத் தேவையான சட்ட உதவியை இலவசமாக வழங்க நம்மவர்கள் முன்வர வேண்டும்.

உயர்நீதிமன்றம் வழங்குகின்ற தீர்ப்பு எதுவோ அதனை அனைவரும் ஏற்றாக வேண்டும்.

ஆகையால், தயவு செய்து விகாரையை உடைக்க வேண்டும் என்பதை நாங்கள் எவரும் கூறாதிருப்பது நல்லது.

ஏனெனில் ஒருவழிபாட்டுத் தலத்தை இடிக்க வேண்டும் எனக் கூறுவது தமிழர்களின் பண்பாட்டுக்கு உகந்ததல்ல என்பதும் இங்கு கவனிக்கப்பட வேண்டும்.

## நெல் சந்தைப்படுத்தல் சட்டத்தை திருத்துவதற்கு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

நெல் சந்தைப்படுத்தல் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

இந்தச் சட்டத்தின் மூலம் நெல் மற்றும் அரிசிக்கொள்வனவின் போது விற்பனை செய்தல், விநியோகித்தல், குற்றுதல், சூடுமிதித்தல் மற்றும் அவ்வாறான செயலாக்கங்களை வியாபாரங்களாக நடத்திச் செல்வதற்கான சபையொன்றைத் ஸ்தாபிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் மற்றும் அதற்குரிய சேவைகளை வழங்குதல் தொடர்பான விடயங்களுக்கான சட்டரீதியான ஏற்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன.

குறித்த சட்டம் விதிக்கப்பட்டு 1971 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை 54 ஆண்டுகளாயினும், அதற்கான எவ்வித திருத்தங்களும் மேற்கொள்ளப்படாமல், இற்றைப்படுத்தப்படாத சட்டமாக நடைமுறையிலுள்ளது.

குறித்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள்சமகாலத்தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் இற்றைப்படுத்துவதற்கு நீண்டகாலம் எடுக்கின்றமையால், தற்போது அடையாளங்காணப்பட்டுள்ள பிரச்சினையான முறைசாரா வகையில் நெல் மற்றும் அரிசி இருப்புக்களைச் சேகரித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தலை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக அனுமதிப்பத்திர முறைமையை அறிமுகப்படுத்துவதற்காக சட்டத்திலுள்ள குறித்த ஏற்பாடுகளைத் துரிதமாகத் திருத்தம் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய 1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க நெல் சந்தைப்படுத்தல் சபை சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம-7)

## புதிய புலனாய்வுப் பிரிவுகளை அறிமுகப்படுத்திய பொலிஸ் திணைக்களம்

(கொழும்பு)

சிக்கலான விசாரணைகளைக் கையாள்வதில் செயற்றிறனை மேம்படுத்துவதற்காக இலங்கைப் பொலிஸ் அதன் குற்றப் புலனாய்வுத் துறையின் கீழ் புதிய பிரிவுகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

மறுசீரமைப்பில் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு, சட்டவிரோத சொத்துக்கள் புலனாய்வுப் பிரிவு மற்றும் மத்திய குற்றப்புலனாய்வுப் பிரிவு ஆகியவை அடங்கும்.

மேலதிகமாக, மேல் மற்றும் தெற்கு மாகாணங்களைத்தவிர அனைத்து மாகாணங்களிலும் மாகாண குற்றப்பிரிவுகள் அமைக்கப்படும் என்றும் இலங்கைப் பொலிஸ் அறிவித்துள்ளது.

குற்றப்புலனாய்வுப் பிரிவுகளுக்கான சிரேஸ்ட பிரதிப்பொலிஸ் மா அதிபர் நிதிக்குற்றம் மற்றும் சட்டவிரோத சொத்து விசாரணைகளை மேற்பார்வையிடுவார்.

இதேவேளை, ஆறு சிறப்புப் பிரிவுகள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம், சைபர் குற்றம், மனித கடத்தல், கடல்சார் குற்றங்கள் மற்றும் உளவுத் துறை பகுப்பாய்வு ஆகியவற்றில் கவனம் செலுத்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

### இலங்கைக்கும் - ஐக்கிய அரபுக்குமிடையில்

## முதலீட்டு ஊக்குவிப்பு, பாதுகாப்பு ஒப்பந்தம் கையெழுத்திடப்படவுள்ளது

(கொழும்பு)

இலங்கைக்கும் ஐக்கிய அரபு எமிர் குடியரசுக்கும் இடையில் பரஸ்பர முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பான உத்தேச ஒப்பந்தம் கையெழுத்திடப்படவுள்ளது.

உத்தேச ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதன் மூலம் ஐக்கிய அரபு எமிர் குடியரசின் இலங்கைக்கான நேரடி வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கும் முதலீடுகள் மற்றும் வர்த்தகத் துறைகளில் இரு நாடுகளுக்கிடையில்காணப்படுகின்ற இருதரப்பு தொடர்புகளை மேலும் பலப்படுத்துவதற்கும் இயலுமை கிட்டியுள்ளது.

இருதரப்பினருக்கிடையில் கையொப்பமிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது.

அதற்கிணங்க 2025 உலக நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி ஐக்கிய அரபு எமிர் குடியரசுக்கு மேற்கொண்டுள்ள உத்தியோகபூர்வ விஜயத்தின் போது குறித்த ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம-7)

### வலம்புரிச் சங்குகளை

## விற்பனை செய்ய முயன்ற மூவர் கைது

திருகோணமலை நிலாவெளி பகுதியில் 04 வலம்புரிச் சங்குகளை 45 மில்லியன் ரூபாய்க்கு விற்பனை செய்ய முற்பட்ட 3 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை, குச்சவெளி மற்றும் ஹொரவப்பொத்தானை தேசிய பூங்காக்களில் வனவிலங்கு அதிகாரிகள் நடத்திய சோதனையின் போது குறித்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவத்தில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 33, 38 மற்றும் 45 வயதுடையவர்கள் எனவும் நிலாவெளி மற்றும் வவுனியா பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ம-7)

## லிட்ரோ எரிவாயு விலையில் மாற்றமில்லை

இந்த மாதத்திற்கான லிட்ரோ எரிவாயுவின் விலையில் எந்த மாற்றமும் இல்லை என எரிவாயு நிறுவனத் தலைவர் சன்ன குணவர்தன தெரிவித்துள்ளார்.

அதன்படி 12.5 கிலோ எடையுள்ள எரிவாயு சிலிண்டரின் விலை 3,690 ரூபாவுக்கும் 5 கிலோ எரிவாயு சிலிண்டரின் விலை 1,482 ரூபாவுக்கும் 2.3 கிலோ எடையுள்ள எரிவாயு சிலிண்டரின் விலை 694 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

### போதைப்பொருள் பாவனை

## 17 பொலிஸ் அதிகாரிகள் 4 மாதத்தில் பணி நீக்கம்

(கொழும்பு)

போதைப்பொருள் பாவனைக் குற்றச்சாட்டின் பேரில் கடந்த நான்கு மாதங்களில் மொத்தமாக 17 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் பாவிக்கும் பொலிஸ் அதிகாரிகளின் பட்டியல் புலனாய்வுப் பிரிவுகள் மற்றும் விசேட பொலிஸ் பிரிவினூடாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

அடையாளம் காணப்பட்ட அதிகாரிகள் கண்காணிக்கப்பட்டு அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

அவ்வாறான உத்தியோகத்தர்கள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, போதைப் பொருளை பயன்படுத்தியமை உறுதிப்படுத்தப்பட்டால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பணி நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

போதைப்பொருள் பாவனையில் குற்றம் சாட்டப்பட்ட எந்தவொரு பொலிஸ் அதிகாரிகளுக்கும் மன்னிப்போ அல்லது இரண்டாவது வாய்ப்போ வழங்கப்பட மாட்டாது என குறிப்பிட்டார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தலில் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான தெளிவூட்டல் பகுதி - II

19

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

சங்கக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்களில் பெரும்பான்மையினரின் ஒப்புதலுடன் முடிவுகள் எடுக்கப்படும். இம் முடிவுகளின் அடிப்படையில் சங்கத்தின் செயற்பாடுகள் அமையும் சங்கத்தின் அனைத்து நடவடிக்கைகள், தீர்மானங்கள், உத்தரவுகள் மற்றும் செயற்பாடுகள் ஒரு கூட்ட நடவடிக்கைப் புத்தகத்தில் பதிவு செய்யப்படும். இப்பதிவுகள் சங்கத்தின் செயற்பாடுகளுக்கு சட்டபூர்வ அங்கீகாரம் அளிக்கவும், அவற்றை நடைமுறைப்படுத்தவும் உதவும். பதிவுகள் சங்கத்தால் உறுதிப்படுத்தப் பட்ட பிறகு, தலைவர் அவற்றில் கையொப்பமிடுவார். இவ்வாறு ஒரு கிராமச் சங்கம் ஜனநாயக முறையில் செயற்பட்டு, தனது அனைத்து நடவடிக்கைகளையும் முறையாகப் பதிவு செய்து வைக்கிறது.

ஒரு கிராமச் சங்கம் எந்த நோக்கங்களுக்காக அமைக்கப்பட்டுள்ளதோ அந்த நோக்கங்களைப் பூர்த்திசெய்வதற்குரிய கடமைகளையும் அதிகாரங்களையும் அது கொண்டுள்ளது. கிராமத்துச் சுகவாழ்விலும் அதன் அபிவிருத்தியிலும் அதில் உள்ள வயதுவந்த சகல மக்களும் சிரத்தை எடுப்பதற்கு வேண்டிய ஊக்கத்தை அவர்களுக்குக் கொடுத்து அவர்களை நற் பிரசைகளாகப் பயிற்றுவது ஓர் கிராமச் சங்கத்தின் பிரதான நோக்கமாகும்.

கிராம மக்களின் முயற்சிகளை பயனுள்ள வகையில் வழிநடத்துவதற்காக கிராமச் சங்கத்திற்கு சில குறிப்பிட்ட அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த அதிகாரங்களும் கடமைகளும் "கிராமச் சமூகக் கட்டளைச் சட்டம்" எனும் அரசு ஆவணத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இந்த ஆவணம் கிராமச் சங்கத்தின் செயற்பாடுகளுக்கான வழிகாட்டியாக அமைந்துள்ளது.

### கிராம சமூகங்கள் கட்டளைச் சட்டம் பற்றிய ஒரு குறிப்பு (Village Communities Ordinance)

கிராம சமூகங்கள் கட்டளைச் சட்டம் இலங்கையில் கிராம சமூகங்கள் தொடர்பான சட்டத்தை திருத்தி ஒருங்கிணைக்கும் ஒரு சட்டமாகும். இது 1924 நவம்பர் 1 ஆம் திகதி முதல் அமலுக்கு வந்தது.

இச் சட்டம் பிரதேச இறைவரி அதிகாரி பிரிவுகளை கிராம பகுதிகளாகப் பிரிக்க அமைச்சருக்கு அதிகாரம் அளித்தது. ஒவ்வொரு கிராம பகுதிக்கும் கிராம குழு தேர்ந்தெடுக்கப்பட அதிகாரம் அளித்தது. கிராம குழுக்களின் அதிகாரங்களாக நில வரி விதித்தல், உரிமக் கட்டணங்கள் வசூலித்தல், கடன் பெறுதல் போன்ற அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. கிராம குழுக்கள் துணைச் சட்டங்களை இயற்றலாம். கிராம குழுக்களின் செயற்பாடுகளை அரசு மேற்பார்வையிடும். இந்த கட்டளைச் சட்டம் இலங்கையின் கிராமப்புற நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தி, கிராம மக்களின் பங்கேற்பை ஊக்குவித்தது.

### இதன் முக்கிய நோக்கங்கள் மற்றும் அம்சங்கள்:

1. கிராம சமூகங்களின் அமைப்பு: இந்த சட்டம் கிராமங்களின் உள்ளமைப்புகளை, அதில் உள்ள பொதுவான பொருளாதார மற்றும் சமூக அமைப்புகளை ஒழுங்கமைக்க உதவுதல். கிராம மக்களின் பொது நலன் மற்றும் சமூக முன்னேற்றத்துக்கான கட்டமைப்புகளை உருவாக்குதல்.

2. கிராம சமூகங்களின் ஆட்சி: கிராமத்தில் உள்ள ஆட்சியாளர்கள் மற்றும் நிர்வாகிகள் அவர்களது பொறுப்புகளை மற்றும் அதிகாரங்களை தெளிவாக வரையறுக்கின்றது. இது கிராம நிர்வாகத்தில் பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் புரிதலை ஊக்குவிக்கின்றது.

3. சமூகப் பணிகள் மற்றும் திறன் மேம்பாடு: கிராம சமூகங்களுக்குத் தேவையான அத்தகைய திறன்கள் மற்றும் திட்டங்களை உருவாக்கி, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவுதல். இதன் மூலம், கிராம சமூகங்கள் அதிகம் சீர்திருத்தப்பட்டு, மக்கள் மற்றும் சமூக அமைப்புகளுக்கிடையிலான வினைத்திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் செயற்படுத்தல் என்பனவாகும்

கிராமச் சங்கத்தின் அதிகாரமும் கடமைகளும் அதன் எல்லைக்குட்பட்ட பகுதியைப் பொறுத்தே அமையும். கிராமத்தின் உயிர்நாடியாக விளங்குவது அதன் சமூகமே. கிராம வாழ்க்கையின் தரத்தை உயர்த்துவதும், சுற்றுச்சூழலை மேம்படுத்துவதும், மக்களின் ஆரோக்கியத்தையும் முன்னேற்றத்தையும் உறுதி செய்வதுமே கிராமச் சங்கத்தின் முதன்மை நோக்கமாகும்.

கிராமச் சங்கத்தின் முக்கிய கடமைகள் பின்வரும் மூன்று அம்சங்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

நிலம்: நில மேலாண்மை, விவசாய முன்னேற்றம், நில பயன்பாட்டுத் திட்டமிடல்.

ஆரோக்கியமும் சுகாதாரமும்: பொது சுகாதாரம், நோய்த் தடுப்பு, மருத்துவ வசதிகள் மேம்பாடு.

சமுதாயம்: சமூக நலன், கல்வி வளர்ச்சி, பொருளாதார மேம்பாடு, கலாசார பாதுகாப்பு.

இவ்வாறு, கிராமச் சங்கம் தனது பகுதியின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் நல்வாழ்விற்கும் பாடுபடும்.

ஒரு கிராமச்சங்க அதிகாரத்தில் காணி, பூமி ஆதனங்கள் மத்திய அரசாங்கத்தால் ஒப்புவிக்கப்பட்டுள்ளன. தானாகவே இந்நிலங்களைக் கிராமச் சங்கம் அபிவிருத்தி செய்யலாம். வீட்டு மிருகங்களை வளர்த்தல், அவற்றை இனம் பெருகச் செய்தல் என்பனவற்றிலும், விவசாய விருத்தியிலும், கிராம மக்கள் பார்த்துப் பின்பற்றக்கூடிய மாதிரித் தோட்டங்களை நடத்துவதற்காகவும் இந்நிலங்களைக் கிராமச் சங்கங்கள் பயன்படுத்துவதிலும் ஈடுபட முடிந்தது. இவை கிராமச் சங்கத்து நில அபிவிருத்திக் கடமைக்குள் அடங்கும்.

தனது அதிகாரத்தில் உள்ள நிலங்களை விவசாயம் செய்தல், ஆடு மாடுகள் மேய்வதற்கான புற்றரைகளை அமைத்தல் என்னும் பிரயோசனமான கருமங்களுக்கும் அது விரும்பியவாறு குத்தகைக்குக் கொடுக்கலாம். அல்லது, தானே புற்றரைகளைப் புதிதாக அமைக்கலாம். அல்லது புல் வளர்ப்பதற்கு நிலத்தைக் குத்தகைக்குக் கொடுக்கலாம்.

தண்ணீர் ஓடும் வடிகால்கள், பள்ளமான சகதி நிலங்கள், என்பவை சனங்களுக்குத் தீமை விளைவிக்காமலிருக்க அவற்றைத் தானே பெற்றுத் தன் பரிபாலனத்தில் வைத்திருப்பதும் கிராமச் சங்கத்தின் இன்னுமோர் கடமையாகும். ஆறுகள் கடப்பதற்குரிய ஓடத் துறைகள், பாதைகள் என்பவற்றை அமைத்துப் போடுதலும் அதன் கடமையாகும்.

கிராமச் சங்கத்தின் அதி பிரதான கடமை மக்களின் ஆரோக்கியத்துடன் சம்பந்தப்பட்டதாகும். தனது பரிபாலனத்தில் உள்ள மக்கள் தேகாரோக்கியமுடையவராய் வாழ்தற்குரிய சகல கருமங்களையும் அது ஆற்றும்.

ஒரு சமூகம் ஆரோக்கியத்துடன் இருப்பதற்கு அதன் சூழ்நிலை சிறந்ததாயிருக்கவேண்டும். அப்படியான சிறந்த சூழ்நிலையைக் கிராமச் சங்கம் அமைக்க வேண்டும். பின்வரும் விதங்களில் அது கிராமத்தில் வீடுகள் கட்டுப்படுவதை ஒழுங்குசெய்ய அதிகாரம் உடையதாக இருந்தது:-(1) வீடுகளுக்கு ஆபத்து விளைவிக்காத உபகரணங் களையே, அவை கட்டுவதில் உபயோகிக்கவேண்டும் என்று அது விதிக்கும் (2) கட்டப்படும் வீடுகள் போதிய வெளிச்சமும் காற்றோட்டமும் உடையனவாக இருத்தல் வேண்டும் என்று விதிக்கும் சுகாதாரத்துக்கேற்ற இந்த நிபந்தனைகளைக் கொண்டிருந்தது.

சாக்கடைகளைச் சுத்தம் செய்தல் மலசலசுத்தி, கழிவுப்பொருள்களை அகற்றி, ஆபத்து விளைவிக்காத வகையில் அப்புறப்படுத்தல் என்பனவும். ஓர் சமூகத்தின் ஆரோக்கியத்துடன் தொடர்பான பிரதான கருமங்களாகும். போசன சாலைகள், பாண் போரணைகள், பாற்சாலைகள் என்பவற்றையும், சீக்கிரத்தில் பழுதடையும் மீன், இறைச்சி முதலியவற்றின் விற்பனையையும் மேற்பார்வை செய்தல் இன்னோர் பிரதான கருமமாகும்.

சுகாதார விதிகளுக்கமைய, சுத்தமான உணவுப்பொருட்களைச் சந்தைகளில் வைத்து விற்பதற்கு, அச்சந்தைகளைத் தனதாக்கி அவற்றை மேற்பார்வை செய்து வருதலும் கிராமச் சங்கத்தின் கடமைகளில் ஒன்று. மலேரியா போன்ற நோய்கள்பரவாமற் கட்டுப்படுத்தல், கிராம மக்களுக்கு நல்ல நீர் வசதிகள் பெற்றுக்கொடுத்தல் என்பனவும் கிராமச் சங்கத்தின் கடமைகளில் அடங்கும்.

தனது நிருவாகத்தில் உள்ள மக்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும் ஓர் கிராமச் சங்கத்துக்கு அதிகாரம் உண்டு. பொருட்கள் வாங்குவோர் சுயநலமிகளான வியாபாரிமாரிடம் ஏமாறாமல் இருப்பதற்காக கடைகளில் உள்ள நிறுவைப்படிகள், அளவுகோல்கள், அளவைகள் என்பவற்றைக் காலந்தோறும் பரிசோதனை செய்து அவை பிரமாணத்துக்குக் குறையாமல் இருப்பதைக் கிராமச் சங்கம் கவனித்துக்கொள்ள அதிகாரம் கொண்டிருந்தது.

சட்டத்தை மீறி நடப்பவர்களைத் தண்டிப்பதற்கும் அதற்கு அதிகாரம் உண்டு. கிராம மக்களுக்கிடையே சூதாட்டம், கோழிச்சண்டை போன்ற கெட்ட பழக்கங்கள் இருப்பின் அவற்றைத் தடுக்கக் கிராமச் சங்கத்துக்குச் சட்டபூர்வமான அதிகாரம் இருந்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆணொருவரின்...

குறித்த கடைத் தொகுதியின் மாடியில் தங்கியிருந்தவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வவுனியா சாந்தசோலைப் பகுதியைச் சேர்ந்த சுப்பையா ஆனந்தன் (வயது-40) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த நபர் மாடியில் இருந்து கீழே விழுந்து மரணமடைந்ததாகப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ம-7,250)

## மின்வெட்டு...

எதிர்வரும் நாட்களில் மின்வெட்டை அமுல்படுத்துவதா? இல்லையா? என்பது தொடர்பில் நேற்று கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

கலந்துரையாடலின் பின்னர் எதிர்வரும் நாட்களில் மின்வெட்டு அமுல்படுத்தப்படாது என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது. (ம-7,250)

## கிராமிய...

துடன், ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 1,500 கிலோமீற்றர்கள் வடமாகாணத்திலும் மற்றும் 500 கிலோமீற்றர்கள் கிழக்கு மாகாணத்திற்கும் முன்னுரிமை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உத்தேசிக்கப்பட்டுள்ள கிராமிய வீதிகளைப் புனரமைக்கின்ற வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ம-7)

## 7,456 பதவி...

மற்றும் தொழிநுட்ப அமைச்சில் நிலவும் 179 பதவி வெற்றிடங்களையும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அமைச்சில் நிலவும் 132 பதவி வெற்றிடங்களையும் நிரப்புவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சில் 400 பதவி வெற்றிடங்களையும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சில் நிலவும் 161 பதவி வெற்றிடங்களையும் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சில் நிலவும் 3ஆயிரத்து 519 பதவி வெற்றிடங்களையும் மேல் மற்றும் கிழக்கு மாகாண சபைகளில் நிலவும் 39 பதவி வெற்றிடங்களையும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவில்நிலவும்17பதவிவெற்றிடங்களையும் நிரப்புவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம-7)

## கோம்பயன்...

கும் தாம் பாதிக்கப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இந்நிலையில் போராட்டக்காரர்களைச் சந்தித்த தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி குறித்த விடயம் தொடர்பில் உரிய தரப்புக்களுடன் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார். (ம-7,33)

## கஜேந்திரகுமார்...

தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றிருந்த கடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போது, மக்களின் தனியார் காணிகளை அபகரித்து தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக் கட்டுமானங்களை அகற்றி மக்களின் காணிகள் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தேன்.

இதன் பின்னர் "விகாரையை இடிக்க வாரீர்" என்று நான் அழைப்பு விடுத்தது போன்ற விளம்பரம் வடிவமைக்கப்பட்டு போலியான விசமப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவ்விடயத்தை அறிந்து, உடனேயே எனது உத்தியோகபூர்வ முகநூல் மற்றும் எக்ஸ் தளத்தினூடாக, குறித்த செய்தி போலியானது என பதிவிட்டதுடன், ஊடக சந்திப்பிலும் போலி விளம்பரம் குறித்தும் எனது நிலைப்பாட்டையும் தெளிவுபடுத்தியிருந்தேன்.

குறித்த விடயத்தை மறுத்து எனது தெளிவுபடுத்தல்களை வெளிப்படுத்தியிருந்த போதிலும், பொலிஸாரினால் மல்லாகம் நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, 14ஆம் திகதிக்கு அழைப்புக்கட்டளை எனக்கு அனுப்பப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (ம-7,33)

## தையிட்டி...

கிழமை முதல் அங்கு பாரிய போராட்டம் ஒன்று நடைபெற்றுள்ள நிலையில்,

யாழ்ப்பாணம் சென்றபோது தன்னிடம் இந்த விடயத்தைப் பற்றிக் கூறியிருந்தார்கள்.

இதுவொரு பாரதூரமான விடயம் என்பதால், சகல தரப்பினரையும் இணைத்துக் கலந்துரையாட வேண்டும் எனத் தீர்மானித்திருந்த போதிலும் அரசாங்க மட்டத்தில் எந்தவிதக் கலந்துரையாடலும் நடத்தப்படவில்லை என அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்துள்ளார். (ம-7)

## தையிட்டியில்...

யாழ்.தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரைக் கட்டுமானத்தை உடனடியாக அகற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரியும், சட்டவிரோதமாகக் கையகப்படுத்தப்பட்ட காணிகளை உரிமையாளர்களிடம் உடனடியாகக் கையளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியும் நேற்று மாலை 4 மணிக்குக் கவனயீர்ப்புப் போராட்டம் ஆரம்பமாகியது.

தையிட்டி விகாரைக்கு முன்பாக முன்னெடுக்கப்படும் இந்தப் போராட்டம் பௌர்ணமி தினமாகிய இன்று புதன் கிழமை மாலை 6 மணி வரை தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப்போராட்டத்துக்குப் பல தரப்பினரும் ஆதரவு வழங்கியுள்ளனர்.

எனவே தமிழ் மக்கள், தமிழ்க் கட்சிகளின் உறுப்பினர்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவரையும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு வலுச்சேர்க்குமாறு தையிட்டி விகாரைக் காணி உரிமையாளர்கள் அழைப்பு விடுத்துள்ளார்கள். (ம-7)

## உலக அரசு...

திஸாநாயக்க இருதரப்புச் சந்திப்புக்களை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உச்சி மாநாடு நாளை வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## வவுனியாவில்...

வித்தனர்.

வவுனியா, பூவரசங்குளம் பகுதியில் கடந்த மாதம் வீடு ஒன்றில் இருந்து கைத்தொலைபேசி ஒன்றும் பிறிதொரு வீட்டில் இருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றும் திருடப்பட்டிருந்தது.

இச்சம்பவம் தொடர்பில் முருங்கன் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய நபர் ஒருவர் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். (ம-7,250)


மஹஜன சம்பத
திகதி 2025.02.11
சீட்டிழுப்பு இலக்கம் 5744
X 9 0 3 3 3 6
அத சம்பத X 3 3 3 6
சீட்டிழுப்பு இலக்கம் 319
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.02.11
சீட்டிழுப்பு இலக்கம் - 1774
D 05 15 16 71 D
Double Chance 62221

மெகா பவர்
திகதி 11/02/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2092
V 12 06 12 15 22

ஜய
திகதி 2025.02.11
சீட்டிழுப்பு இலக்கம் 0012
C 5 2 8 7

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3986
சீட்டிழுப்பு திகதி 11.02.2025
K 30 31 58 72
K
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.02.11
சீட்டிழுப்பு இலக்கம் 1053
மகரம் 14 22 23 40 மகரம்
30756 47

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பர் பல சம்பத
11.02.2025 வெற்றி வாரம் 452
Q 3 1 0 2 5 7
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.30,933,632.80
66026
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2718
சீட்டிழுப்பு திகதி 2025.02.11 தினம் செவ்வாய்க்கிழமை
13 17 72 76 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 85,577,601.60
DLB

சனிதா
திகதி 11.02.2025 வெற்றி வாரம் 4879
20 33 39 61 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,072,875.20
54911
DLB

சசிரி
வெற்றி வாரம் 620
சீட்டிழுப்பு திகதி 11.02.2025
செவ்வாய்க்கிழமை
19 20 40
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4430
சீட்டிழுப்பு திகதி 11.02.2025 தினம் செவ்வாய்க்கிழமை
10 16 43 59 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.11,020,212.80
249279
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
T 05 20 53 59 75
1894
11.02.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.564,979,084.20
DLB

அட கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2544
சீட்டிழுப்பு திகதி : 2025.02.11
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.70,736,686.40
02 04 06 21 I
163411
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் பலாலி றோட் ஊரெழுவில் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 16 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- பலாலி றோட் ஊரெழுப் பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் இருந்து 300 m
- பலாலி புன்னாலைக்கட்டுவன் சந்தியில் இருந்து சுன்னாகம் செல்லும் பிரதான வீதியில் இருந்து 300 m இருவழிப் பாதை கொண்டது.
- நல்ல தண்ணீர் ஊற்று, சிவப்பு மண், நல்ல சூழல், வீடுகள் அமைப்பதற்கு நல்ல அமைவிடம்.

தொடர்புகளுக்கு :
**077 623 4204, 076 755 8606**

(3402)

## மொத்தக் கொள்வனவுகள்

மொத்தக் கொள்வனவு, டெலிவரிகள் வடமராட்சி சில்லறை கடைகளிற்கு பொருட்கள் கொள்வனவுகள், இலவச Home டெலிவரிகளினை Happy Supermarket உரும்பிராயினூடாகப் பெற்றுக் கொள்ளலாம்.

**Happy Supermarket** - உரும்பிராய்
**076 800 6500/ 077 780 8030**

(832)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

(C-2249)

## நம்பினால் நம்புங்கள்

அதிசயம் ஆனால் உண்மை உங்கள் எதிர்கால வாழ்க்கை துல்லியமாக (காண்டம்) கணித்துத் தரப்படும். ஜனன ஜாதகம் எழுதித் தரப்படும்.

**காயத்திரி திருமண சேவை**
கன்னாதிட்டி சிவன் கோயில் முன்பாக ரூபி விலாஸ்
**076 314 4689,**
**076 008 6961, 077 844 9861**

(3397)

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## பணியாளர்கள் தேவை

கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியில் இயங்கும் குரு காட்வெயார் நிறுவனத்திற்கு விற்பனையாளர்கள் தேவை. 10Km க்கு உட்பட்டவர்கள் தகைமைச் சான்றிதழ்களுடன் நிறுவனத்திற்கு நேரில் வருகை தரவும். காட்வெயார் பொருட்கள் விற்பனையில் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

**குரு காட்வெயார்**
**கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி.**
**077 743 5265**

(C-2251)

## வைத்தியம்

வலிப்பு நோய்| கை விறைப்பு | நாட்பட்ட தலைவலி| மூலம் | கழுத்து வலி | கால் பாத விறைப்பு | முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி தலைக்கு இரத்தம் போகாமை, வாதம் நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : **0777 301 669**

(831)

## திறப்பு விழா

அழைப்பு

**புதிய காவலன்**

**விவாகப் பொருத்துனர் சேவை நிலையம்**



நிகழும் மங்களகரமான தைத்திங்கள் 30ம் நாள் புதன்கிழமை 12.02.2025 சித்தயோகமும் ஆயிலிய நட்சத்திரமும் பூரணை திதியும் பொருந்திய பகல் 9.40 - 10.40 வரையில் உள்ள முகூர்த்தவேளை யில் திறப்பு விழா செய்ய இருப்பதால் அத்தருணம் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், பெரி யோர்கள் வருகை தந்து சிறப்பித்து ஆசீர்வதிக்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றேன்.

கே.கே.எஸ்.வீதி. தெல்லிப்பளை.
துர்க்காதேவி ஆலயத்திற்கு முன்பாக
(C-2248)
இங்ஙனம்: மு.ப.முருகையா
விவாகப் பொருத்துனர்

## விற்பனைக்கு

1. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக மூன்று மாடிப் புதிய கடையும்.
2. யாழ். கே.கே.எஸ் வீதியில் வேணி களஞ்சியத்திற்கு அண்மையில் மூன்று மாடிக் கடையும்.
3. யாழ். கஸ்தூரியார் வீதியில் கபிலா பாட்டாக் கடைக்கு அண்மையில் மூன்று கடையும்.
4. யாழ். தட்டாதெருச் சந்திக்கு அண்மையில் கே.கே.எஸ் வீதி முகப்புடன் 10 பரப்புக் காணியும்.
5. யாழ். பிறவுண் வீதியில் 3 பரப்பில் அமைந்த புதிய மாடி வீடும் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :
**077 723 25 35**

(C-2250)


# மரண அறிவித்தல்



மலர்வு
27.04.1944

உதிர்வு
10.02.2025

## ஆறுமுகம் பஞ்சாட்சரம்

சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கு பழனியாண்டவர் கோவில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பஞ்சாட்சரம் அவர்கள் (10.02.2025) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னாச்சிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் இராசமலரின் அன்புக் கணவரும் பகிரங்கன், தனரங்கன், கிருபரங்கன், அருள்ரங்கன், தயாழினி, இராஜரங்கன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சற்குணவதியின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சாம்பசிவத்தின் அன்பு மைத்துனரும் சுவேந்திரன் - கவிதா, சசிகரன் - ஜெயக்குமாரி, இதயவேணி, மகாபவானி, மயூரா, சண்முகப்பிரியா, ரஜீவன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கஜானன், விதுர்ஷனா, ஜெசிகரன், மோதிலன், நடீஷ், நிதிஷ், கஜலஷ்மன், கிசானி, லிசானி, யாத்விகா, இனியா, இசையா, அட்சரன், வினுஷ், ஆதித் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 12.02.2025 புதன் கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(3391)

பழனியாண்டவர்
கோவில் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

கிருபரங்கன் (மகன்) : 077 364 3899
பகிரங்கன் (மகன்) : +447832677225
அருள்ரங்கன் (மகன்) : +13479547103
தயாழினி (மகள்) : +16473890015
தனரங்கன் (மகன்) : +94771698165

தகவல்:
குடும்பத்தினர்
021 492 1700
077 170 5134

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.